வானவில்

VAANAVIL

இதழ் 144 | மார்கழி 2022

ISSUE 144 | DECEMBER 2022

# இலங்கையில் எட்டாவது அதிசயம் நிகழுமா?




உலகில் மனிதர்களைப் பிரமிக்க வைக்கும் எட்டு அதிசயங்கள் இருப்பதாக நாம் கேள்விப்பட்டு வந்திருக்கிறோம் அவற்றில் சில மனிதர்களால் உருவாக்கப்பட்டவை என்பதையும் நாம் அறிவோம். எனவே மனிதர்கள் நினைத்தால் எந்தவொரு அரும் பெரும் சாதனைகளையும் சாதிக்க முடியும் என்பது நிரூபணமாகிறது.

அவ்வாறான ஒரு முயற்சி தற்பொழுது இலங்கையில் ஆரம்பமாகி இருக்கிறது. அது நிறைவேறினால், உலகின் எட்டாவது அதிசயமாகக்கூட அது திகழலாம். அது வேறொன்றுமல்ல, இலங்கையில் சுமார் ஒரு நூற்றாண்டாக புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சி.

திருவாளர் (ஜனாதிபதி) ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கையின் தற்போதைய அரசாங்கம் நாட்டின் நீண்டகாலப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகண்டு, தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கப் போவதாகக் 'கங்கணம்' கட்டியிருக்கிறது.

இதன் பொருட்டு நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளையும் அழைத்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றையும் கூட்டியிருக்கிறது. வழமைபோல, ஜே.வி.பி. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள இல்லையாயினும், ஏனைய பெரும்பாலான கட்சிகள் கலந்து கொண்டு ஜனாதிபதியின் முயற்சிக்குத் தமது ஆதரவை (ஓரளவு தன்னும்) தெரிவித்துள்ளன.

'சோசலிஸம்' பேசும் ஜே.வி.பி. கலந்து கொள்ளாததிற்குக்காரணம் அவர்களது வழமையான சிங்களப் பேரினவாத நிலைப்பாடாகும். குட்டி முதலாளித்துவ இடதுசாரித்துவம் பேசும் அவர்கள் இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்கும் எல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என அடிக்கடி கூறுவார்கள். ஆனால் பதவியில் இருக்கும் ஏதாவதொரு அரசு சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் தன்னும் அந்த வழியில் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்தால் அவர்கள் தமது குட்டி முதலாளித்துவத்துக்கு உரிய தன்மையில் சந்தர்ப்பவாத ரீதியில் அதைக் குழப்பி அடிப்பார்கள். 2000 ஆம் ஆண்டில் சந்திரிக கொண்டுவந்த அரசியல் தீர்வுத் திட்டத்தை ஜே.வி.பி. ஐக்கிய தேசியக் கட்சியுடன் (ஐ.தே.க.) சேர்ந்து குழப்பியடித்தமை இதற்கொரு உதாரணம்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையிலும் கூட, அவர் சொல்வது போல இனப் பிரச்சினைக்கு ஒரு உரிய தீர்வை அல்லது குறைந்தபட்ச தீர்வைத்தன்னும் காண்பாரா என்ற சந்தேகம் பலர் மத்தியில் இருக்கிறது. இப்படியான சந்தேகம் எழுவதற்கு அவரதும், அவரது ஐ.தே.கவின் கடந்தகால வரலாறும் காரணம்.

ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவின் நீண்டகால உறுப்பினர். இன்று எவராலும் அசைக்க முடியாத அதன் தலைவராகவும் இருக்கிறார். அது மட்டுமின்றி ரணில், அக்கட்சியில் முன்பு தலைவராக இருந்தவரும், இலங்கையில் நீண்ட காலம் ஜனாதிபதியாக இருந்து (1977 – 1990) பலராலும் வெறுக்கப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்தவரும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஈடாட்டமில்லாத விசுவாசியும், சிங்களப் பேரினவாதியுமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சகோதரி வழி மருமகனும் ஆவார். இது அவருக்கு மிகப்பெரிய பாரம்பரிய பிதுரார்ஜிதச் சொத்தாகும்.

ரணில் விக்கிரமசிங்க, தனது மாமனார் ஜே.ஆரின் அமைச்சரவையிலும், பின்னர் ஆர்.பிரேமதாசவின் அமைச்சரவையிலும் முக்கிய அமைச்சரவைப் பொறுப்புகளை வகித்தவர். 2002 இலும், 2015 இலும் பிரதமராகவும் பொறுப்பு வகித்தவர். தற்பொழுது நிறைவேற்று

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இயற்கை விவசாயத்தை கைவிட்டுவிட்டதா அரசு?

இலங்கையில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் ரூபா 20 ஆயிரம் நன்கொடையாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி நெற்செய்கையாளர்கள் நெற்பயிர்ச்செய்கைக்கு தேவையான எம்.ஒ.பி (Muriate of Potash - MOP) என்ற இரசாயன உரத்தை கொள்வனவு செய்து கொள்ளும் நோக்கிலேயே வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

எம்.ஒ.பி பசளை உட்பட விவசாய இரசாயன உரங்கள் இறக்குமதி செய்யப்படுவது 2021 ஆம் ஆண்டு ஏப்பிரலில் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தது. அந்நிய செலவாணியை மீதப்படுத்தும் நோக்கிலும், இயற்கை முறையிலான விவசாயத்தை ஊக்கப்படுத்துவதற்காகவுமே முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய தலைமையிலான அரசாங்கத்தால் இத்தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் இரசாயன உரங்கள் மீதான தடையால் இலங்கையில் கணிசமானளவில் உணவுப்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டு, உணவு நெருக்கடி ஏற்படலாமென்ற நிலை தோன்றியதால், 7 மாதங்களின் பின்னர் விவசாய இரசாயன உரங்கள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

'தனது அரசு இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதை முற்றுமுழுதாக தடை செய்தது தவறான செயல்' என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டார். இவ்வாண்டு மார்ச்சில் காலிமுகத்திடலில் ஆரம்பித்த கோத்தபாய அரசு பதவி விலகக் கோரிய 'அரகலய' போராட்டக்காரர்களும் முன்னைய அரசின் இரசாயன உரத்தடையை துரும்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதன் பின்னர் இயற்கை முறையிலான விவசாயத்தை நடைமுறைப்படுத்துவதாயின், இரசாயன உரங்களை படிப்படியாகவே தடைசெய்திருக்க வேண்டுமென்ற கருத்து நாடு தழுவி பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இரசாயன பசளை இறக்குமதி விவகாரத்தில் முன்னைய அரசு நடைமுறைத் தவறிழைத்திருப்பினும், சேதன விவசாயத்தை ஊக்கப்படுத்துதலென்ற கொள்கையில் தவறேதும் இருக்க முடியாது. ஆனால் தற்போதைய அரசு இரசாயன உரத்தை விவசாயிகள் கொள்வனவு செய்வதற்கு ஆசிய வங்கியின் நிதியுதவியை பெற்றுக் கொடுப்பதென்பது, முற்றுமுழுதாக இயற்கை விவசாயம் என்பதில் விவசாயிகளை நம்பிக்கையிழக்க வைக்கும் முயற்சியாகவே கருத வைக்கின்றது.

மருதனாமடத்தில் இயங்கும் யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி மு.கந்தசாமி தெரிவித்திருக்கும் கருத்தை பாருங்கள்: 'வைக்கோலில் 90 வீதமான பொட்டாசியமும் 75 வீதமான சிலிக்காவும் காணப்படுவதுடன் சிறியளவில் நைதரசன், பொஸ்பரசு, கல்சியம், மக்னீசியம், சல்பர் போன்ற பயிர்ப் போசணைகளும் காணப்படுகிறது. உலர்வலய நெற்செய்கைக்கு சிபார்சு செய்யப்பட்ட எம்.ஒ.பியில் இருக்கும் பொட்டாசியம் பசளை அளவைவிட, ஆறுமடங்குக்கு அதிகமாக வைக்கோலில் காணப்படுகிறது. முழு வைக்கோலைப் பசளையாகப் பாவிக்கும்போது வேறு எந்த இரசாயன பொட்டாசியப் பசளையையும் பாவிக்கத் தேவையில்லை. மண்ணில் விளையும் நெற்பயிரினால் கிரகிக்கப்பட்ட பயிர்ப் போசணையை, மீண்டும் மண்ணுக்கு வழங்கும் மீள்சுழற்சி பசளைப் பிரயோகமானது எங்கிருந்து பெற்றோமோ அங்கேயே மீண்டும் வழங்குவதாகும்'

இலங்கையில் பெரெண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மென்ட்ஸ் கம்பெனி லிமிடெட் (Berendina Micro Investments Company Limited - BMIC), என்றொரு நிறுவனமுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இந்நிறுவனம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் கிராமப்புற விவசாய சமூகத்திற்கு பல்வேறுபட்ட வழிகளில் உதவிகளை வழங்கி வருகின்றது.

கிராமப்புற பிரதேசங்களில் உயர்தர சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் புதிய திட்டமொன்றை பெரெண்டினா நிறுவனம் தொடங்கியுள்ளதெனவும், இத்திட்டத்தின் முதற் கட்டமாக 31 புதிய சேதனப் பசளை உற்பத்தி வியாபாரங்கள் நிறுவப்படவுள்ளதாகவும் கடந்த ஜூலையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. இரசாயனப் பசளையைக் கொள்வனவு செய்ய நிதியுதவி செய்வதன் மூலம், அரசு பெரெண்டினாவின் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட முயல்கின்றதென்றே கூற வேண்டும்.

இரசாயன பசளை பயன்பாடு புற்றுநோய், சிறுநீரகநோய், தோல் நோய் உள்ளிட்ட இன்னும் பல வகையான நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இரசாயன உரங்கள் மற்றும் இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் மண்ணை மலட்டுத்தன்மையடையச் செய்கின்றது. இந்த இரண்டினதும் பாவனைகளால் ஏற்படும் கொடிய பின்விளைவுகள் பெரும் தரவுகளுடன் விஞ்ஞானிகளால் உலகெங்கிலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இயற்கை விவசாயத்தில் எதிர்பார்த்த அளவு அதிக அறுவடை கிடைக்காதென்ற பொதுவான கருத்து உள்ளது. எமது முந்தைய தலைமுறை விவசாயிகள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக முற்றுமுழுதாக இயற்கை முறைகளியே விவசாயம் செய்துள்ளார்கள் என்பதைத் திரும்பிப் பார்த்தால், இக்கருத்தில் உண்மையில்லையென்றே சொல்ல வேண்டும். இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த அனைத்து ஊடகங்களும் முன்வர வேண்டும். இயற்கை விவசாயத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு கொள்கைத் திட்டமொன்றினை இலங்கை அரசு வகுக்க வேண்டும்.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** *sunvaanavil@gmail.com*
*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** *http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# ஈழத்து தமிழ் இலக்கியம்

பாரதியுக இலக்கியம் என்ற பொதுத் தலைப்பின் கீழ் இன்று தமிழிலக்கியம் வளர்ந்து வருகிறது. இந்த இலக்கிய வளர்ச்சியில் ஈழநாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் எவ்வாறு தங்கள் பங்கைச் செலுத்தியுள்ளார்கள் என்பதைச் சுருக்கமாக ஆராய்வதே எனது நோக்கமாகும்.

அங்கொருவர் இங்கொருவராகத் தனிப்பட்ட சில ஆசிரியர்களைத் தவிர, பொதுவாகத் தற்காலத் தமிழிலக்கிய இயக்கங்களும் இலக்கியப் படைப்புகளும் பத்திரிகைகளின் வளர்ச்சியுடன் பிரிக்க முடியாதபடி பிணைந்துகிடக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே.

*1930* ஆம் வருசத்துக்குப் பின்னர் தமிழ் நாட்டில் காந்தி, சுதந்திரச்சங்கு, மணிக்கொடி முதலிய பத்திரிகைகள் தோன்றியதுபோல, ஈழத்தில் காந்திய அரசியலினால் கவரப்பட்ட சிலரின் முயற்சியினால் அரசியலுடன் இலக்கியத்தையும் சேர்த்து வளர்க்க எண்ணி ஸ்தாபிக்கப்பட்டது ‘ஈழகேசரி’. ஈழகேசரியின் ஆரம்பகாலத்தில் பண்டிதர் பரம்பரையிலிருந்தே அதிக ஆதரவு கிடைத்தது. பழைய இலக்கிய இலக்கண விளக்கக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், அரசியற் கட்டுரைகள் – இவைதாம் பெரிதும் வெளிவந்தன. ஈழகேசரியின் இத்தகைய ஆரம்ப வளர்ச்சிக்கும் ‘கலைமகள்’ சஞ்சிகைக்கும் ஒப்புவமையைக் காணலாம். இதனால்தானோ என்னவோ ஈழகேசரி எழுத்தாளர்கள் சிலர் கலைமகளுக்கும் விசயதானம் செய்ய முடிந்தது.

குல–சாபநாதன், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் ஈழகேசரிக் குழுவினர் என்று கூறக்கூடிய வகையில் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் இன்று அக்கால இலக்கிய முயற்சிகளைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது, மேற்கூறிய இலக்கியகர்த்தாக்கள் மறுமலர்ச்சி இலக்கியத்தையோ, இலக்கியத்தின் உட்பிரிவுகளையோ, புதிய பரிசீலனைகளையோ அதிகம் வளர்த்தனர் என்று கூறுவதற்கில்லை. ஆங்கில விமரிசகர்கள் கூறும் ‘ரோமான்டிசம்’ என்னும் கனவுலகக் காட்சிகளில் ஈடுபடச் செய்யும்



இலட்சியபூர்வமான சிந்தனைகளிலும், உணர்ச்சிகளிலும் மயங்கி எழுதினர் என்றுதான் கொள்ளலாம்.

எனினும் *1938* ஆம் வருசமளவில், இளைஞர் சிலரின் ஆர்வத்திற்கும் துடிப்பிற்கும் இப் பத்திரிகை இடம் தரலாயிற்று. மணிக்கொடி, ஊழியன் ஆகிய இரு பத்திரிகைகளும் இவ்விளம் உள்ளங்களுக்குப் பொறாமைப்படத்தக்க முன் மாதிரியாக விளங்கின. இவ்விரு பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த இலக்கிய சர்ச்சைகளை இவர்கள் கவனித்தனர். சிறுகதை, (வசன) கவிதை ஆகிய இரு துறைகளுந்தான் முன்னணியில் அடிபட்டன. இவற்றில் ஈடுபட்டவர்களின் பெயர்களும் அடிபடலாயின. தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தம், விவியன், நமசிவாயம், ராஜ அரியரத்தினம், நாவற்குழியூர் நடராஜன் ஆகியோர் ‘இலக்கிய’ உலகில் பிரவேசித்தனர்.

**க.கைலாசபதி**

ஈழகேசரி இவர்களின் கன்னிப் படைப்புகளுக்கு இடந்தந்து வந்ததாயினும், வாலிபத் துடிப்பின் அவதியுடனும், இலட்சியக் கனவுகளுடனும் தமிழிலக்கிய உலகையே கலக்கிவிட வேண்டுமென முனைந்து நின்ற இவ்விளைஞர்களுக்கு, தமக்கென ஒரு இலக்கியப் பத்திரிகை அத்தியாவசியம் எனத் தெரிந்தது. இக்காலத்தில்தான் திருச்சிப் பக்கத்திலிருந்து ‘கிராம ஊழியன்’ வெளிவரத் தொடங்கியிருந்தது. ஈழத்திலிருந்து இவ்விளைஞரில் சிலர் அதில் தம் முயற்சிகளை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது.

*1946* ஆம் வருசம் யாழ்ப்பாணத்திலிருந்து ‘மறுலர்ச்சி’ என்ற மாத சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. தமது இலக்கிய ஆர்வத்தையே மூலதனமாகக் கொண்டு ஆரம்பித்த மறுமலர்ச்சிக் குழுவினர் முதல் இதழின் ‘முகத்துவாரத்தில்’ பின்வருமாறு எழுதினர்:

“எழுத்தாளர்களும் ரசிகர்களும் சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகை இது. இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி…அரசியல் சமூக விசயங்களைக் குத்திக் கிளறுவதற்காகவே ஒரு புதுமையான இலக்கியத்தை ‘மறுமலச்சி’ சிருஸ்டிக்கப் போவதில்லை…”

ஆரம்பம் எடுப்பாகத்தான் இருக்கிறது. அப்படியிருக்கும் சில காலத்திற்குள் சஞ்சிகை சென்று தேய்ந்திற்று முடிந்தது. ஏன்? சுருங்கச் சொன்னால் ‘மறுமலர்ச்சி’க் குழுவினர் இலக்கியத்தின் மேலிருந்த ‘ஆர்வ’ மிகுதியால் ‘கலை கலைக்காகவே’ என்ற பழைய கொள்கைக்குள் தம்மையறியாமலே சிக்கிக்கொண்டனர் என்பது என் அபிப்பிராயம். இன்னுஞ் சொல்லவேண்டுமானால் இவர்கள் தமது சஞ்சிகைக்கப்பால் பரந்த மக்கள் கூட்டம் ஒன்று இருக்கிறதென்பதை மறந்துவிட்டார்கள். இதனால்தான், சாதாரண மக்கள் மட்டுமல்ல பல ‘இலக்கிய’ வாசகர்களே மறுமலர்ச்சியின் ஆதி – அந்தத்தைப்பற்றி அறியாதிருந்தார்கள், இருக்கிறார்கள். மணிக்கொடி, கிராம ஊழியன், கலா மோஹினி ஆகிய பத்திரிகைகள் வந்த காலத்தில் நிரம்பிய ஆர்வத்துடன் ‘மறுமலர்ச்சி’ கோஸ்டியினர் இலக்கிய உலகைத் தாமும் ஒருகை பார்க்க நினைத்தனர் என்பதுதான் இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது நாம் கூறக் கூடியதாகும். “நானும் ஒரு மறுமலர்ச்சி எழுத்தாளனாக்கும்” என்று சிலர் சொல்லிக்கொண்டு திரியவும் அதனால் ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது.

எனினும் தனிப்பட்ட முறையில் முருகானந்தம், “மகாகவி”, வரதர், நாவற்குழியூர் நடராஜன் ஆகியோர் சில நல்ல படைப்புகளைத் தந்திருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

‘மறுமலர்ச்சி’ குழுவினரில் பெரும்பாலோர் உணரவும் செய்யவும் தவறியதை, அவருக்குப் பின் எழுந்த இலக்கியகர்த்தாக்களின் படைப்புக்கள் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும். மறுமலர்ச்சிக்குப் பின் வந்தவர்களிடம், தாம் ஒரு இலக்கியக் குழுவினர் என்று சொல்லத்தக்க நெருங்கிய தொடர்பில்லை என்பதைத் தவிர, சிந்தனை வளர்ச்சியில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. மேல்நாட்டு இலக்கியங்களில் விருப்பும் பயிற்சியும், தமக்கும் தமது இலக்கியத்திற்கும் அர்த்தம் தரும் முறையில் வெளியேயிருக்கும் மக்கள் சமுதாயத்தைப் பற்றிய உணர்வு, தாம் கையாளும் பாசையில் மிகுந்த சிரத்தை – இத்தகைய பண்புகள் சிலவற்றை இவர்களது இலக்கிய வளர்ச்சியில் நாம் காணலாம்.

இக்குழுவினருள் சில்லையூர் செல்வராசன், முருகையன், சொக்கன், வ.அ.இராசரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் என்பது எனது அபிப்பிராயம். ஈழகேசரியில் எழுத ஆரம்பித்த காலத்திலிருந்தே முற்போக்கு எழுத்தாளராக விளங்கி வந்த அ.ந.கந்தசாமியையும் இக்குழுவினருடன் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. சமீபத்தில் ஈழத்து இலக்கிய உலகில் திடீர்ப்பிரவேசஞ் செய்து மின்வெட்டுப்போல, பளிச் பளிச்சென்று நையாண்டிக் கவிதைகள் பல பாடிவரும் ‘தான்தோன்றிக் கவிராயர்’ இக்குழுவைச் சேர்ந்த இன்னொருவர். இவரது கவிதைகள் சில வேலூர் கந்தசாமிக் கவிராயர், திருச்சிற்றம்பலக் கவிராயர் முதலியோர் படைப்புகளுடன் வைத்து எண்ணப்பட வேண்டும் என்பது எனது துணிவான முடிவு.

பிரேம்ஜி, எச்.எம்.பி.மொஹிதீன், கே.டானியல், ‘புதுமை லோலன்’ ஆகியோர் முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் முன்னணியில் நிற்பவர்களாவர். நமது சமுதாயத்தின் முரண்பாடுகளையுணர்ந்து, பொருளாதார மாற்றத்திற்காக உழைக்கும் அரசியலில் நம்பிக்கை காட்டும் இக்குழுவினர் பல காரணங்களால் போதிய அளவு இலக்கிய சிருஸ்டிகளில் ஈடுபடவில்லை. முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் மூலம் எதிர்காலத்தில் நல்லதொரு இலக்கிய பரம்பரையை இவர்கள் உண்டுபண்ண முடியும்.

யாழ்ப்பாணம் பண்டிதத் தமிழ் மீதும், சைவத்தின் மீதும் கொண்ட ஈடுபாட்டிற்குப் பேர்போனது. எனினும் மணிக்கொடி காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்துப் பண்டிதர்கள் சிலர் மறுமலர்ச்சி இலக்கியத்தில் போதிய அளவு அக்கறைகாட்டி வந்தார்கள். பொதுவாகப் பண்டிதர்கள் சிறுகதை (வசன) கவிதை, விமர்சனக் கட்டுரை முதலிய இலக்கியப் பிரிவுகளில் தம் பார்வையைச் செலுத்துவது குறைவு. எனவே இப்பண்டிதர்கள், ‘முற்போக்குப் பண்டிதர்கள்’ என வைதீகப் பண்டிதர்களால் கருதப்படவும் நேர்ந்ததுண்டு. பஞ்சாட்சர சர்மா, தியாகராஜன், சரவணமுத்து ஆகியோர் மறுமலர்ச்சியில் ஆர்வம் காட்டும் பண்டிதர்களாவர். பண்டித உலகில் இருந்துகொண்டு பழமையையும் புதுமையையும் அறிந்து விளையாடுபவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

கல்விக்கழகங்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் ஈழத்தமிழின் மறுமலர்ச்சிக்கு அதிகம் உழைத்த ஒரு சிலருள் சிறந்து விளங்குபவர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை. சுமார் பத்து நாடகங்களும், சில நாவல்களும், கவிதைகளும் எழுதியிருக்கும் இவர் ஈழத்தில் நாடக எழுத்தாளரின் ஏகப் பிரதிநிதியாக விளங்குகிறார். விமர்சகர் ஒருவர் கூறுவது போல, “யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழின் ஜீவனை அறிந்து, அப்பேச்சுத் தமிழின் தாளலயங்களைக் கண்டு அவற்றைத் தனது நாடகங்களில் அமைத்த ஒரே ஒரு ஆசிரியர் இவர்தான்.”

இதுவரை நான் கூறியவற்றிலிருந்து சுமார், இருபது வருடங்களுக்கு முன் ஆரம்பித்த ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சி கனவுலகுக் காட்சிகளில் லயித்திருந்த எழுத்தாளர்களுடன் ஆரம்பித்து, யதார்த்த இலக்கியம் படைக்கும் – படைக்கக்கூடிய – எழுத்தாளர்களுடன் இன்று வளர்ந்து வருகிறது என்பது புலனாகும் என நினைக்கிறேன். “இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டுவிடாதே, அது உன்னைக் கொன்றுவிடும், அதைப் பொழுதுபோக்காகவே வைத்துக்கொள்” என்று புதுமைப்பித்தன் ஒருமுறை சொன்னதாக அறிகிறோம்.

இந்த உண்மையை உணர்ந்தோ என்னவோ, ஈழத்தில் தற்சமயம் ஒருவராவது இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. பத்திரிகாலயங்களில் கடமை பார்ப்பவர்களைத் தவிர, மிகுதிப்பேர் யாவருக்கும் இலக்கிய சிருஸ்டி பொழுதுபோக்கு. தகுந்தபடி பத்திரிகைகள் சன்மானம் தராத நிலைமை, முதலாளித்துவ ஸ்தாபனங்கள் நடத்தும் பெரும்பாலான பத்திரிகைகளில் முற்போக்குள்ள இலக்கியப் படைப்புக்கள் வெளிவர முடியாத நிலைமை – இவை போன்ற காரணங்களால் இலக்கியமும் இலக்கிய கர்த்தாக்களும் திசை தெரியாது மயங்கி நிற்கும் ‘சரித்திர கதி’யில் இன்றைய மறுமலர்ச்சி இலக்கியம் வந்து நிற்கிறது. இதிலிருந்து விடுபட்டு முன்னேறினால்தான் மறுமலர்ச்சியின் பயனை அடைய முடியும்.

(ஈழத்து தமிழிலக்கியம் மீது மார்க்சிய கண்ணோட்ட ஆய்வின் அடிப்படையில் நின்று புதிய ஒளியைப் பாய்ச்சியவர் க.கைலாசபதி. அவருடைய இந்தக் கட்டுரை தமிழகத்திலிருந்து தொ.மு. சிதம்பர ரகுநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த “சாந்தி” என்ற முற்போக்கு இலக்கிய இதழின் 1955 டிசம்பர் –ஆண்டு மலர் – இதழில் வெளிவந்ததாகும். அவருக்கு அப்பொழுது வயது இருபத்திரண்டு (1933 – 1982) என்பது குறிப்பிடத்தக்கதாகும்)

# யுத்தங்களால் கொள்ளை இலாபமீட்டும் ஆயுத கொம்பனிகள்!

உக்ரையினிலும், மத்திய கிழக்கிலும், உலகின் ஏனைய சில பகுதிகளிலும் நடக்கும் போர்கள் அமெரிக்காவிலும் அதன் மேற்கு ஐரோப்பிய கூட்டாளி நாடுகளிலும் உள்ள ஆயுத உற்பத்தி நிறுவனங்களுக்கு கொள்ளை இலாபத்தை அள்ளிக் கொடுத்து வருகிறது. ஏற்கெனவே அதிகரித்திருந்த இலாபம் உக்ரைன் – ரஸ்ய யுத்தத்துடன் மேலும் பல மடங்காக அதிகரித்துள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட சில புள்ளிவிபரங்களின்படி, கடந்த 7 வருடங்களாக ஆயுத தயாரிப்பு நிறுவனங்களின் இலாபம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது.

சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமை தளமாகக் கொண்டுசெயல்படும் ஸ்ரொக்ஹோம் சர்வதேச சமாதான அமைப்பு (Stockholm International Peace Research Institute) அண்மையில் வெளியிட்ட தகவலின்படி, 2012 இல் உலகின் 100 முன்னணி ஆயுத வியாபார கொம்பனிகளின் ஆயுத விற்பனை 1.9 சத வீதத்தால் அதிகரித்து 592 பில்லியன் டொலர்களை எட்டிப் பிடித்திருக்கிறது. அந்த நிறுவனம் அளித்த தகவலின்படி,


**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# மார்க்சிய பார்வையில் காந்தி

மகாத்மா காந்தியைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்திற்கு வர இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்துமே துரதிர்ஸ்ட்டவசமாக ஒன்று மிக எளிமையாகவும் அவரை ஒருதலைப்பட்சமாகவும் பாராட்டுவதாக இருக்கின்ற, அல்லது மிக எளிமைப்படுத்தி, அவரை ஒருதலைப்பட்சமாக விமர்சிப்பதாக இருக்கின்றன. எனினும் நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் இத்தகைய ஆபத்துகளைத் தவிர்ப்பதாக இருக்க வேண்டும். அத்தகைய முயற்சிகளுக்கான ஒரு பங்களிப்பாகவே காந்தியின் வாழ்க்கையிலிருந்து இந்த எழுத்தாளருக்குத் தோன்றுகின்ற முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதலில் கவனிக்கப்பட வேண்டியது காந்தி ஒரு கருத்துமுதல்வாதி என்பதுதான். அவரை வழிநடத்திய உலகக் கண்ணோட்டம் பொருள்முதல்வாதத் தத்துவதத்திற்கு எதிரானது என்ற பொருளில் மட்டுமல்ல, தன் முன்னால் அவர் வைத்துக் கொண்டிருந்த கொள்கைகளைத் தன் வாழ்க்கையின் இறுதிவரை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தார் என்பதாலும்தான். உண்மை, அகிம்சை, வாழ்க்கையின் இன்பங்களைத் துறத்தல் போன்ற தார்மீக நெறிகள், சுதந்திரம், ஜனநாயகம், அமைதி போன்ற அரசியல் கருத்துக்கள், மதங்கள் மற்றும் சமூகங்களின் ஒற்றுமை போன்ற சமுதாயக் குறிக்கோள்கள் ஆகிய இவை அனைத்தும் அவரது வாழ்வு மற்றும் போதனைகளின் பிரிக்கமுடியாத பகுதிகள். இத்தகைய சில சிறப்பான கொள்கைகளை பற்றி நின்றதே அவரை தன் பொதுவாழ்வின் தொடக்க காலத்தில் தென்னாபிரிக்க சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபடச் செய்தது. இதுவே அவரைத் தேசத்தின் விடுதலைக்காக ஒத்துழையாமை மற்றும் இதர இயக்கங்களை வகுக்க உதவியது. இதுவே அவரை எண்ணற்ற ஜனநாயக நோக்கங்களுக்காகப் போராடுபவராகவும் ஆக்கியது. இறுதியாக, அவரை தேச ஒற்றுமை என்னும் உயரிய லட்சியத்திற்காக உயிர்நீத்த தியாகியாகவும் ஆக்கியது.

இரண்டாவதாக, அதுவரை தூங்கிக் கொண்டிருந்த கோடிக்கணக்கான ஏழைகளைத் தட்டி எழுப்புவதில் அவரது கொள்கைகள் மிகப்பெரும் பங்காற்றின. அவர்களோடு பேசும்போது அவர் பயன்படுத்திய அரை மதத்தன்மை கொண்ட மொழி, அவர் வாழ்ந்த எளிய, ஆட்பரமற்ற வாழ்க்கை, அவர்களின் கோரிக்கைகளுக்காக அவர் நடத்திய போராட்டங்களில் காட்டிய ஆர்வம், இவையெல்லாம் கோடிக்கணக்கான கிராமப்புற ஏழைகளை அவர் பால் ஈர்த்தன. தங்களை ரட்சிக்க வந்தவராகவும், கடவுளின் அவதாரமாகவும், தாங்கள் இருந்த பரிதாப நிலையிலிருந்து தங்களை மீட்க வந்தவராகவும் அவர்கள் அவரைக் கண்டனர்.



**இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட்**

பிற்போக்கான சமூகக் கண்ணோட்டம் கொண்டிருந்த காந்தியே நவீன தேசிய ஜனநாயக இயக்கத்திற்கு பெருந்திரளான கிராமப்புற ஏழைகளை ஈர்க்கும் ஆழமான புரட்சிகர அற்புதத்தை உருவாக்கிய காரணகர்த்தா என்று எவரேனும் கூறினால் அது சுயமுரண்பாடு போலத் தோன்றக்கூடும். எனினும், இந்தச் சுயமுரண்பாடு, தேசிய ஜனநாயக இயக்கம் நிலப்பிரபுத்துவத்துடன் தொடர்புள்ள முதலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்டது என்ற உண்மையிலிருந்து எழுகின்ற நிஜ அரசியல் வாழ்வில் இருந்த முரண்பாட்டின் வெளிப்பாடே ஆகும்.

மூன்றாவதாக, தேசிய இயக்கத்தில் கிராமப்புற ஏழைகளை ஈர்ப்பதில் அவர் முக்கிய பங்காற்றினார் என்ற போதிலும், முதலாம் உலகப் போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் அவர்கள் வெளிப்படுத்திய மிகப் பிரமாண்டமான விழிப்புணர்விற்கும் அவர்தான் காரணம் என்பதும் தவறாகும். ஏனெனில், இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் ஏற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளின் விளைவே அந்த விழிப்புணர்வு. இந்திய தேசிய இயக்கத்திற்குள் வளர்ந்து வந்த தீவிரவாதப் பிரிவு சில பகுதிகளில் விவசாயிகளையும் தொட்டது. துருக்கி, சீனா, எல்லாவற்றிற்கும் மேலாக ருஸ்யப் புரட்சி போன்ற சர்வதேச நிகழ்வுகள் ஆசிய மக்களின் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது போன்றவை இந்திய விவசாயிகளின் மனச்சாட்சியின் மீது செயல்படத் தொடங்கிய சில அடிப்படையான காரணங்களாகும். காந்தி அந்தச் சித்திரத்திற்குள் வந்திருந்தாலும் அவை செயல்பட்டிருக்கும். ஒருவேளை அதேமாதிரியாக இருந்திருக்காது.

இதைச் சொல்வது இந்திய விவசாயிகளின் விழிப்புணர்விற்கு ஒரு குறிப்பிட்ட மாதிரியான குணாம்சத்தைக் கொடுத்ததிலும், புதிய எழுச்சி, சுதந்திரம், ஜனநாயகத்திற்கான சுதந்திர இயக்கத்தோடு இணைக்கப்பட்டதிலும் தனிநபர் என்ற முறையில் காந்தி ஆற்றிய பங்கை மறுப்பதற்காக இல்லை. கிராமப்புற மக்களை ஈர்த்ததிலும் அதன் தொடர்ச்சியாக தேசிய ஜனநாயக இயக்கத்தைப் பலப்படுத்தியதிலும் காந்தியின் பங்கை மறுப்பது, மக்களிடம் ஏற்பட்ட அந்த விழிப்புணர்விற்கு முழுக்க முழுக்க காந்தியே காரணம் என்பது போன்றே

ஒருதலைப்பட்சமானதே ஆகும்.

நான்காவதாக, இவ்வாறாக ஒரு தேசிய இயக்கத்தின் பெரும் பலவீனத்தைப் போக்கியதில் பங்காற்றியவர் என்ற பாராட்டுதலுக்கு காந்தி தகுதியுடையவர் ஆகிறார். அதாவது, இதுவரை அணிதிரட்டப்படாமல் இருந்த பெருந்திரளான கிராமப்புற ஏழைகளைக் கொண்டு வந்ததன் மூலம் இயக்கத்தை உண்மையிலேயே ஒரு தேசிய இயக்கமாக, அனைத்து வர்க்கங்களும் கலந்து கொண்ட இயக்கமாக அவர் ஆக்கினார். அதேவேளையில், கிராமப்புற ஏழைகள் சுயேட்சையான ஒரு சக்தியாகச் செயல்பட்டு விடுவார்களோ என்று எப்போதும், தன் இறப்பு வரைக்கும் அவர் பயந்துகொண்டே இருந்தார் என்பதையும் மறந்துவிடக் கூடாது. சுதந்தரம், ஜனநாயகத்திற்கான இயக்கத்தில் அவர்களை அணிதிரட்ட வேண்டும் என்று விரும்பியபோதிலும், அவர்கள் அவருடைய சொந்த வர்க்கமான முதலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழேதான் செயல்பட வேண்டும் என்பதிலும் அவர் குறிப்பாக இருந்தார்.

சவுரிசவ்ரா நாட்களிலிருந்து தன் இறுதி வரை, சுதந்திரம் ஜனநாயகத்திற்கான இயக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் முதலாளி வர்க்கத்திற்குப் பாதுகாப்பானது என்று கருதப்பட்ட வரம்பிற்குள்ளேயே கிராமப்புற ஏழைகளை வைத்திருக்க அனைத்துவகையான நடவடிக்கைகளையும் அவர் எடுத்தார். இந்த உண்மையைக் காண மறுக்கும் எவரும், முதல் உலகப் பெரும்போர் காலகட்டத்தில் ஏகாதிபத்திய ராணுவத்திற்கு ஆள் எடுக்கும் ஒரு தளபதியாகச் செயல்பட்ட அவர், ஏன் ஏகாதிபத்தியத்திற்கும் அதன் முகவர்களுக்கும் எதிரான போராட்டத்தில் மக்கள் அகிம்சையையே கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார் என்பதை விளக்க முடியாது.

ஐந்தாவதாக, கிராமப்புற ஏழைகள் விசயத்தில் மட்டுமல்ல, தொழிலாளி வர்க்கம் இதர உழைக்கும் மக்கள் விசயத்திலும் அவரது அணுகுமுறையும் செயல்பாடும் முதலாளி வர்க்கத்திற்கு உதவுவதாகவே இருந்தது. அவரது 'தர்மகர்த்தா' முறை பற்றிய கொள்கை, அரசியல் செயல்பாட்டின் வழிகாட்டியாக சில ஒழுக்க நெறிகள் இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியது, தனது தளபதிகளின் பாராளுமன்ற நடவடிக்கைகளோடு ஆக்கபூர்வத் திட்டம், சத்தியாக்கிரகம் போன்ற பாராளுமன்றத்திற்கு வெளியிலான தனது சொந்த செயல்பாடுகளை சாமர்த்தியமாக இணைத்த விதம், எதிரிக்கு எதிராக மக்கள் இயக்கத்தை நடத்திக் கொண்டே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற பிரத்தியேகமான காந்திய வழிமுறை, இவை எல்லாமே நடைமுறையில் (அ) ஏகாதிபத்தியத்திற்கு எதிரான செயல்பாட்டிற்காக மக்களைத் திரட்டுவதில் (ஆ) அவர்களைப் புரட்சிகர நடவடிக்கைகளில் இறங்குவதிலிருந்து தடுப்பதில் முதலாளி வர்க்கத்திற்கு அளவற்ற உதவி புரிந்தன.

மக்களை எழுச்சி கொள்ளச் செய்வதிலும், கட்டுப்படுத்துவதிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்குவதிலும், அதே நேரத்தில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதிலும் அவருக்கு இருந்த தனித்திறன் அவரை முதலாளி வர்க்கத்தின் தன்னிகரற்ற தலைவராக ஆக்கியது. அந்த வர்க்கத்தின் அனைத்து குழுக்களும் கோஸ்டிகளும் அவர்மீது நம்பிக்கை வைத்திருந்தன. எனவே அவரால் முழு வர்க்கத்தையும் ஒன்றுபடுத்தி செயல்பட வைக்க முடிந்தது.

இறுதியாக, வரலாற்றில் முதலாளி வர்க்கத்தின் முதன்மையான தலைவர் என்ற பாத்திரத்தை காந்தி வகித்தார் என்பதைக் கொண்டு அவர் எப்போதும், எல்லா விசயங்களிலும் முதலாளி வர்க்கத்துடன் ஒன்றுபட்டார் எனப் புரிந்து கொள்ளக்கூடாது. மறுபுறத்தில், நண்பராகவும், தத்துவவாதியாகவும், வழிகாட்டியாகவும் அவர் இருந்து தலைமை தாங்கிய முதலாளி வர்க்கத்தினுடைய, அவருடைய சிறப்பியல்பிற்கு ஏற்ற வகையில் பல தருணங்களிலும், பல விசயங்களிலும் காந்தியின் குரல் தன்னந்தனியான ஒன்றாக இலலை எனினும், ஒரு சிறுபான்மைக் குரலாக இருந்திருக்கிறது. அத்தகைய தருணங்கள் அனைத்திலும் அவரும் அவர்களும் தற்காலிகமாக வேறு வேறு பாதைகளில் செல்வது என்று தங்களுக்குள் முடிவு எடுத்துக் கொள்வார்கள். முதலில் சுயராஜ்யவாதிகளுக்கும் மாற்றத்தை விரும்பாதவர்களுக்கும் இடையிலான வேலைப்பிரிவினையாக, பின்னர் 1932 – 33 ஆண்டுகளில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பிந்தைய வருடங்களில், இரண்டாம் உலகப் பெரும்போரின்போது பல சந்தர்ப்பங்களில், இறுதியாக சுதந்திரத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய மாதங்களில் இந்த அதிசயம் மீண்டும் மீண்டும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

அவருடைய இறுதி நாட்களில் அவருக்கும், அவரது சாகாக்களுக்கும் இடையில் அதிகரித்து வந்த இந்த இடைவெளியை ஆராயும்போதே அவரைப் பற்றிய, அவரது குறிக்கோள்கள் பற்றிய, உண்மையிலேயே பாரபட்சமற்ற பல கோணங்களிலான மதிப்பீட்டிற்கு நாம் வர முடியும். ஏனெனில், தார்மீக விழுமியங்களை காந்தி வலியுறுத்தியதானது ஒரு சமயம் முதலாளி வர்க்கத்திற்கு சாதகமாக இருந்து, பின்னர் அவரது இறுதி நாட்களில் அதற்குத் தடையாக ஆனதன் வெளிப்பாடே அதிகரித்து வந்த இந்த இடைவெளி ஆகும்.

முதலாளி வர்க்கம் இரண்டு முனைகளில் போராட வேண்டியிருந்த நாட்களில் ஒரு பக்கம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்காக நமது நகர்ப்புற, கிராமப்புற ஏழைகளை அது திரட்ட வேண்டியிருந்தது. அதே நேரத்தில் மக்கள் மத்தியில் வளர்ந்து கொண்டிருந்த புரட்சிகரப் போக்குகளை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தபோது, காந்தியால் உருவாக்கப்பட்ட வன்முறையற்ற போராட்ட உத்தியை மேற்கொள்வது அதற்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டது. இருந்தபோதிலும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் வெற்றி பெற்ற பிறகு, அரசு அதிகாரத்தைப் பெற்ற பிறகு, அது இருமுனைகளில் போராட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மேலும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எந்தப் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தாலும் அது அரசு மட்டத்திலேயே நடத்தப்பட்டது. அதற்காக மக்களைச் செயலில் இறக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

மேலும், முதலாளி வர்க்கம் தன் கைக்கு வந்த அரசு அதிகாரத்தை தனது வர்க்க நலன்களைக் காப்பதற்காகவே பயன்படுத்தும். எனவே, அரசு அதிகாரத்தை மக்களுக்கு எதிராகவே

பயன்படுத்தும். அவர்கள் அதிகாரத்திற்கு வந்ததன் மற்றொரு விளைவு என்னவெனில், முதலாளி வர்க்கத்தின் தனிநபர் பிரதிநிதிகள் (சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள்) தங்களையும், தங்கள் உறவினர்கள், நண்பர்கள், அடிவருடிகளையும் அரசு மற்றும் மக்களின் செலவில் செல்வந்தர்களாக ஆக்கிக் கொள்ளத் தொடங்கினர். இதற்காக எந்த வகையான ஊழலிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

முதலாளி வர்க்கம் மற்றும் அதன் பிரதிநிதிகளின் நிலையில் ஏற்பட்ட இந்த மாற்றம்தான் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட நாட்களில் தான் போதித்து வந்த கருத்துக்களை இன்னமும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த காந்தியோடு அதை முரண்படச் செய்தது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட நாட்களில் அவர் போதித்து வந்த தார்மீக நெறிகள் அதிகாரத்திற்கு வந்த அரசியல்வாதிகளுக்கு தடையாக ஆயின. மறுபக்கமோ, காந்தி அவற்றுக்கு உண்மையாக இருந்தார். தனது சகாக்கள், தளபதிகள் ஆகியோரிடம் ஏற்பட்ட இந்தத் திடீர் மாற்றத்தோடு அவரால் ஒத்துப்போக முடியவில்லை. குறிப்பாக, இந்து – முஸ்லீம் ஒற்றுமை மற்றும் காங்கிரசார் மத்தியில் ஊழல் ஆகிய பிரச்சினைகளில் நிலைமை இவ்வாறே இருந்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட வருடங்களில் அவர் கடைப்பிடித்து வந்த உயரிய கொள்கைகளுக்காகவே – குறிப்பாக அவை முதலாளி வர்க்கத்தின் கைகளில் பயனுள்ள ஆயுதமாக நடைமுறையில் இருந்ததாலேயே – காந்தி தேசத் தந்தை ஆனார். மேலும், தன்னுடைய பிந்தைய நாட்களில் அவர் முதலாளி வர்க்கத்திலிருந்து கிட்டத்தட்ட தனிமைப்பட்டதிற்குக் காரணம், சுதந்திரத்திற்குப் பிந்தைய நாட்களில் அவருடைய உயரிய கொள்கைகள் முதலாளி வர்க்கத்தின் சுயநலனுக்குத் தடையாக இருந்ததே ஆகும். உண்மை, அகிம்சை, அறம் போன்ற காந்தியின் போதனைகளை அரசியல் அதிகாரத்தை அடைவதற்காகத்தான் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இன்றும் கூட கடுமையான எதார்த்தவாதிகள் என்ற வகையில், சமூக – பொருளாதார மாற்றத்திற்கான எந்த ஒரு இயக்கத்தின் வெற்றியும் தோல்வியும் அரசியல் அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதையும், அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும் பொறுத்தே அமைகிறது. இதனாலேயே அவர்கள் அதிகாரத்தையும் அதனைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பையும் துறக்கத் தயாராக இல்லை.

இவ்வகையில் காந்தியிசத்தை மதிப்பிடுகையில், மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்டுகள் முதலாளி வர்க்கத்தின் தத்துவம், நடைமுறை என்ற வகையில் அதன் சாதக – பாதக அம்சங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சுதந்திரப் போராட்ட காலத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பானாலும் சரி, அல்லது பூதான இயக்கத்தின் போது நிலப்பிரபுத்துவ எதிர்ப்பானாலும் சரி, அல்லது 1970 களில் எதேச்சாதிகாரத்திற்கு எதிரான காலத்திலும் சரி, காந்தியிசம் என்பது முறையே நாட்டு விடுதலை, விவசாய சீர்திருத்தம், ஜனநாயகப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காகப் போராடியது. அதே நேரத்தில் மறுமலர்ச்சி மற்றும் இருண்மைவாத சமூக – கலாச்சார கண்ணோட்டத்தின் காரணமாக மக்கள் இயக்கத்தின் தடையற்ற வளர்ச்சிக்கு அது இடையூறான ஒன்றாக ஆகியது.

இங்கொன்றும் அங்கொன்றுமாக தனிநபர்கள், வினோபா பாவே அல்லது வேறு லட்சியவாதிகளின் போதனையைக் கேட்டு அதிகாரத்தையோ உடமையையோ துறக்கலாம். ஆனால் நிலப்பிரபுக்களும் முதலாளி வர்க்கத்தினரும், இதர சுரண்டும் வர்க்கங்களும் ஒரு வர்க்கம் என்ற வகையில், தீர்க்கதரிசிகள் கனவு கண்ட, நடைமுறை புரட்சியாளர்கள் எதற்காகப் போராடினார்களோ அத்தகைய சமூக மாற்றங்களுக்கு விருப்பத்துடன் உடன்பட மாட்டார்கள். அந்தவகையில்தான் வினோபா பாவேயையும் அவரது சகாக்களையும் அவர்கள் நிச்சயம் வாழ்த்துவார்கள். கிராமதான இயக்கத்தை தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டு பிரச்சாரம் செய்வதற்கு உதவுவார்கள். ஆனால் அரசியல் அதகாரத்திற்கான தங்களது போராட்டத்தை அவர்கள் எப்போதும் கைவிடமாட்டார்கள்.

கம்யூனிஸ்ட்டுகள், சோசலிஸ்ட்டுகள், மற்ற இடதுசாரிகளைப் பொறுத்தவரையில் சமூக – பொருளாதார மாற்றத்திற்கான போராட்டத்தில் அரசியல் அதிகாரம் அவசியமான ஒரு அம்சம் என்பதில் அவர்கள் தெளிவாகவே இருந்தனர். இரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, மார்க்சிய மூலவர்கள் பிரகடனம் செய்ததைப் போல, எந்தவொரு ஆளும் வர்க்கமும் தானாகவே அரசியல் அதிகாரத்தை விட்டுவிடுவதில்லை.

(இந்தக் கட்டுரை தோழர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் எழுதிய "மகாத்மாவும் அவரது இசமும்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். தோழர் நம்பூதிரிபாட் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவராகும். 1957 இல் கேரளாவில் நடைபெற்ற தேர்தலில் இடதுசாரிகள் வெற்றிபெற்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் முதன்முதலாக ஒரு அரசாங்கம் அமைந்தபோது, நம்பூதிரிபாட் அவர்களே அதன் முதலமைச்சராக பணி புரிந்தார்.

சித்தாந்த முரண்பாடு காரணமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் 1964 இல் பிளவு ஏற்பட்டு, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவான போது நம்பூதிரிபாட் அந்த அணியுடன் தன்னை இணைத்துக் கொண்டதுடன், அக்கட்சியின் தத்துவ வழிகாட்டியாக செயல்பட்டதுடன், பின்னர் கட்சியின் பொதுச்செயலாளராகவும் செயலாற்றினார்.

## சவூதியுடன் யுவானில் வர்த்தகம் செய்ய சீனா முடிவு!

**அ**ண்மையில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் சவூதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் சவூதி மன்னர் உட்பட சவூதி அரசாங்கத்தலைவர்களைச் சந்தித்ததுடன். ஏனைய வளைகுடா நாடுகளின் அரச தலைவர்களையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

சீனாவுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான வர்த்தகம் அண்மைக்காலமாக பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. சீனா சவூதி அரேபியா உட்பட வளைகுடா நாடுகளிலிருந்து பெருந்தொகையான எண்ணெயையும் இயற்கை வாயுவையும் இறக்குமதி செய்து வருகிறது. அதேபோல சீனாவிலிருந்து

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# சுவரை விற்று சித்திரம் வாங்கப் போகிறார்கள்!

அண்மையில் இலங்கை அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை ஊடகங்களிடம் வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, இலங்கை சர்வதேச வர்த்தக ஒழுங்குமுறையில் ஒரு பங்காளராக இல்லையென்றும், அதன் காரணமாக இலங்கையிலுள்ள வங்கிகள் கடன் கோரி விடுக்கும் கோரிக்கைகளை சர்வதேச நிறுவனங்கள் ஏற்கிறார்கள் இல்லையென்றும் தெரிவித்திருக்கிறார்.

இதற்குக் காரணம், இலங்கையிடம் போதிய நிதிக் கையிருப்பு இல்லாமையே எனத் தெரிவித்துள்ள அமைச்சர், இந்த நிலைமையை மாற்றுவதானல், குறைந்தபட்சம் மூன்று பில்லியன் டொலர்கள் இலங்கையின் சேமிப்பாகக் கையிருப்பில் இருக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அமைச்சர் மேலும் கருத்துரைக்கையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் கூட பல அரச சொத்துக்கள் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன எனத் தமது அரசாங்கத்தின் செய்கையை நியாயப்படுத்திய அமைச்சர் பந்துல, இந்த நிலைமையில் நாம் எமது நிதிக் கையிருப்பை அதிகரிக்கவில்லையெனில், எதிர்காலத்தில் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே சில அரச சொத்துகளை விற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சீனா, இந்தியா, வியட்நாம், மலேசியா போன்ற நாடுகள் பல முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுத்துள்ளன. எம்மால் மட்டும்



அதைச் செய்ய முடியாது இருப்பதால், அது ஏன் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அது மாத்திரமல்ல, எமது நாட்டில ஏற்கெனவே முதலீட்டுள்ளவர்கள் கூட வேறு நாடுகளை நோக்கிச் செல்கின்றனர். எனவே, எமது சிந்தனை முறையை மாற்றி, இலங்கைக்கு முதலீட்டாளர்களை அதிக அளவில் கவர்ந்திழுக்க முயற்சிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

அதன் அடிப்படையில் இலங்கை அந்த நிதிக் கையிருப்பை அடைவதற்காக "பொருளாதார மறுசீரமைப்பு" என்ற போர்வையில் நாட்டின் பொதுச்சொத்துளை தனியாருக்கு விற்பதற்கு (தாரைவார்ப்பதற்கு) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இன்றைய உலகில் முதலாளித்துவ நாடுகளோ அல்லது சோசலிச நாடுகளோ, எந்த நாடுகளாக இருந்தாலும், அந்நிய பொருளாதார உதவிகளும் தொடர்புகளும் இன்றி நிலைத்திருக்க முடியாது என்பது மறுக்க முடியாத ஓர் உண்மைதான்.

ஆனால் பிரச்சனை என்னவென்றால், இலங்கை தனது பொருளாதாரத்தை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதற்கு திட்டமிட்டதொரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அந்நிய உதவிகளில் மட்டும் – அதுவும் கொள்ளைக்கார ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களில் – தங்கி நிற்பதாகும். இலங்கையின் அனைத்துப் பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணகர்த்தாக்கள் நாடு சுதந்திரமடைந்த பின்னர் 75 ஆண்டுகளாக நாட்டை மாறிமாறி ஆட்சி செய்து வந்த கட்சிகளாகும். மக்களது வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏறும் அரசுகள் பின்னர் அந்த மக்களை எட்டி உதைத்துவிட்டு, அந்த மக்களைக் கலந்தாலோசிக்காமலே தமது தீர்மானங்களை எடுத்து வந்திருக்கின்றன. தற்போதைய அரசும் அந்தப் பாதையிலேயே தொடர்ந்து செல்கின்றது. (முதலாளித்துவ அரசுகளிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது)

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்காமல், அரச சொத்துகளை விற்றும், அந்நிய நாடுகளிடம் அறாவட்டிக்குக் கடன் வாங்கியும் நடத்தும் பிச்சைக்கார வாழ்வு நாட்டையும் மக்களையும் மேலும் அதளபாதாளத்தில் வீழ்த்தி மேலும் மேலும் அழிவையே உருவாக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

---

5ம் பக்கத்தொடர்ச்சி...

அமெரிக்காவிலுள்ள 40 கொம்பனிகள் மட்டும் 2021 இல் 299 பில்லியன் டொலர்களுக்கு ஆயுதங்கள் விற்றுள்ளன. இதில் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ரகன் (Pentagan) உக்ரைன் யத்தத்தின் போது விற்பனை செய்த பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களின் விபரம் உள்ளடக்கப்படவில்லை.

Lockhead Martin, Raytheon Technologies, Boeing, Northrop Grumman, General Dynamics ஆகிய 5 அமெரிக்க நிறுவனங்களே உலகின் முன்னணி ஆயுதத் தயாரிப்பு மற்றும் விற்பனை நிறுவனங்களாக உள்ளன. இந்த நிறுவனங்கள் உலகின் ஏதாவதொரு பகுதியில் அமெரிக்கா யத்தத்தைத் தொடர்வதற்காக அமெரிக்காவின் பிரதான கட்சிகளான குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆயிரக்கணக்கான டொலர்களை நன்கொடையாக அள்ளிக் கொடுக்கின்றன. 2022 ஆரம்பத்தில் இந்த ஐந்து ஆயுதக் கொம்பனிகளுடனும் தொடர்பு கொண்ட அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ரகன், ரஸ்யாவுடனான ஒரு நீண்டகால யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களை இந்தக் கொம்பனிகள் தொடர்ந்து வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. இதன் அர்த்தம், உக்ரைனில் அமைதியும் இயல்பு வாழ்க்கையும் திரும்புவதை அமெரிக்கா அனுமதிக்கத் தயாராக இல்லை என்பதுதான்.

# அறியப்பட வேண்டிய ஆளுமை



சீன கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னாள் பொதுச் செயலாளர் மற்றும் ஜனாதிபதியாக பணியாற்றிய ஜியாங் ஜெமின் (Jiang Zemin) அவர்கள், தனது 96 வது வயதில் நவம்பர் 30ஆம் திகதி ஷாங்காய் நகரத்தில் மரணமடைந்தார்.

சீனாவைப் பற்றி, சீன பொருட்களை பற்றி, அந்நாட்டின் பழைய தலைவர்களை பற்றி பலரும் அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. நன்கு பிரபலமான புரட்சி நடத்திய தலைவர்களை பற்றியும் பரவலாக அறிந்திருப்பார்கள்.

1978 ஆம் ஆண்டு டெங் சியோ பிங் தலைமையில் திறந்த வெளி கொள்கை அறிவிக்கப்பட்டு உலகம் தழுவிய முறையில் சீனாவின் முன்னேற்றம் மிகப்பெரும் மாற்றத்தை சீனத்திலும் உலக அளவிலும் ஏற்படுத்தியது.

இந்த மாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்தவர் டெங்சியோ பிங்க் ஆவார். அவருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற ஜியாங் ஜெமின் அந்தக் கொள்கையை மேலும் முன்னெடுத்துச் சென்றார்.

சீனா கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பங்கு அதிமுக்கியமானதாக இருந்தாலும், வரலாற்றில் தனிநபர்களின் பாத்திரங்களும் தவிர்க்க முடியாத பங்கினை செலுத்தி இருக்கின்றன.

இந்த வகையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த பெரும் வளர்ச்சிக்கு, சீன நாட்டின் பெரு மாற்றத்திற்கும், அனுபவம் வாய்ந்த தலைவர்கள், கல்வி கற்றவர்கள், திறமையானவர்கள், களத்தில் நின்று போராட்டத்தின் மூலம் கற்றுக்கொண்டவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

தலைமை என்பது அறிவு ஜீவித்தனத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. கள அனுபவம், மக்களுடன் இரண்டற கலந்து செயல்படுதல், அமைப்பின் அடிமட்டம் வரை தலைமையில் செயற்களம் அமைத்துக் கொள்ளுதல், இவையெல்லாம் சேர்ந்துதான் ஒரு கட்சியின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும்.

தோழர் ஜியாங் ஜெமின் வாழ்க்கை இந்த வகையிலே தான் அமைந்திருக்கிறது. அதனால் தான் சீனாவின் மாற்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பங்கை அவரால் திறம்பட நடத்திச் செல்ல முடிந்தது.

சீனாவின் தலைமை அமைப்புகள் கீழ்கண்ட முறையில் சீன மக்களுக்கு அழைப்புகளை விடுத்துள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிசி) மத்திய குழு, சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் (பிஆர்சி), பிஆர்சியின் மாநில கவுன்சில், சீன மக்களின் தேசியக் குழுவின் நிலைக்குழு அரசியல் ஆலோசனை மாநாடு (cppcc) ஆகியனவே இந்த அறிவிப்பை வெளியிட்டன:

'எங்கள் அன்புக்குரிய தோழர் ஜியாங் ஜெமின் இரத்தப் புற்றுநோய் மற்றும் பல உறுப்புகள் செயலிழப்பால் அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் பலனளிக்காமல் இறந்தார் என்பதை முழுக் கட்சிக்கும், முழு இராணுவத்திற்கும் மற்றும் அனைத்து இன மக்களைச் சேர்ந்த சீன மக்களுக்கும் ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறோம்' என்று அந்த அறிவிப்பு கூறுகின்றது.

## அ.பாக்கியம்

தோழர் ஜியாங் ஜெமின் ஒரு சிறந்த தலைவர், முழுக் கட்சி, முழு இராணுவம் மற்றும் அனைத்து இன மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட உயர் மதிப்பை பெற்றவர்.

ஒரு சிறந்த மார்க்சிஸ்ட், சிறந்த பாட்டாளி வர்க்க புரட்சியாளர், அரசியல்வாதி, இராணுவ மூலோபாயவாதி மற்றும் இராஜதந்திரி, பண்படுத்தப்பட்ட கம்யூனிஸ்ட் போராளி, மற்றும் சீன குணாதிசயங்களைக் கொண்ட சோசலிசத்தை கட்டியமைத்த சிறந்த தலைவர். அவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாம் தலைமுறை மத்திய கூட்டுத் தலைமையின் மையமாகவும், மூன்று பிரதிநிதித்துவக் கோட்பாட்டின் முதன்மை நிறுவனராகவும் இருந்தார்.

தமது இளமைப் பருவத்திலேயே ஜியாங் ஜெமின் தேச பக்தி மிக்கவராகவும், ஜனநாயக புரட்சியின் கருத்துக்களாலும் ஈர்க்கப்பட்டார். விடாமுயற்சியுடன் ஜனநாயக புரட்சி பற்றி தெரிந்து கொள்வதற்கான தேடுதலில் இறங்கினார்.

தனது கல்லூரி பருவத்தில் ஜப்பானிய எதிர்ப்பு போராட்டங்களில் பங்கு பெற்று தீவிர தேசபக்தியை வளர்த்துக் கொண்டதுடன், மார்க்சிய உலக கண்ணோட்டத்தையும் பெறுவதற்கான களமாகவும் அவருக்கு இந்த போராட்டம் அமைந்தது.

தனது வாழ்க்கையை தேசத்திற்காகவும் தேசிய விடுதலைக்காகவும் மக்கள் நலனுக்காகவும் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று சபதம் எடுத்து செயலாற்று தொடங்கினார்.

1926 இல் ஓகஸ்ட் 17 அன்று யாங் ஷோவின் கிழக்கு நகரத்தில் பிறந்தார். அவரது மாமாவும் வளர்ப்பு தந்தையுமான ஜியாங் ஷாங்கிங் ஒரு புரட்சியாளர். 1939 இல் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார்.

1947 இல் ஷாங்காய் ஜியோ வா டோங் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற

பிறகு, ஜியாங் ஜெமின் உள்ளூர் தொழிற்சாலைகளில் பணிபுரிந்தார். இளைஞர் அமைப்புகளில் இணைந்து இரவுப் பள்ளிகள் நடத்தி தொழிலாளர்களை அணி திரட்டினார்.

இளம் தொழிலாளர்கள் தொழில் வல்லுனர்களிடையே புரட்சிகரமான பிரச்சாரங்களைச் செய்வதற்கான பொறுப்பு ஏற்றுக்கொண்டு செயல்பட்டார்.

1949 இல் விடுதலைப் போராட்டம் நடந்த பொழுது ஷாங்காய் பகுதி விடுதலை அடைவதற்கான போராட்டத்திற்கு தொழிலாளர்களை அணி திரட்டியதுடன், அங்கு இருக்கும் தொழிற்சாலைகளை பாதுகாக்கும் பணியிலும் தலைமை ஏற்று ஈடுபட்டார்.

சீனாவில் புரட்சி வெற்றி பெற்று சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் சீன மக்கள் குடியரசு அமைக்கப்பட்ட காலத்தில் ஷாங்காய் மாநிலத்தில் உணவு தொழிற்சாலையின் துணை இயக்குனராகவும், ஷாங்காய் சோப்பு தொழிற்சாலையில் முதல் துணை இயக்குனராகவும் செயல்பட்டார்.

இயந்திரத்தின் தேவைகள் கருதி உருவாக்கப்பட்ட இயந்திர அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இயந்திர வடிவமைப்பு இயந்திரப் பிரிவின் தலைவராக பணியாற்றினார்.

1954 ஆம் ஆண்டு சீனாவிற்கு தொழில் நுட்ப வல்லுநர்களும், நிர்வாக திறமை வாய்ந்த ஊழியர்களும், கட்டுமான பணிகளுக்காகவும், இயந்திரத் தயாரிப்பு பணிகளுக்காகவும் தேவைப்பட்டனர். தோழர் ஜியாங் ஜெமின் அந்த பொறுப்பை ஏற்று செயல்படுத்த ஆரம்பித்தார்.

1955 ஆம் ஆண்டு மொஸ்கோவில் உள்ள ஸ்டாலின் ஒட்டோமொபைல் ஒர்க்ஸ் தொழிற்சாலையில் பயிற்சியாளராக ஓர் ஆண்டு பணி புரிந்தார்.

1956 ஆம் ஆண்டு சீனாவுக்கு திரும்பியவுடன் டைனமிக் மெக்கானிக் பிரிவின் துணைத் தலைவராகவும், டைனமிக் மெக்கானிக் பிரிவின் துணை தலைமை பொறியியலாளராகவும், முதன் முதலாக கட்டமைக்கப்பட்ட ஒட்டோமொட்டிவ் ஒர்க்ஸ் மின் தொழிற்சாலையில் இயக்குனராகவும் பொறுப்பேற்று சீனாவின் தொழிற்சாலை வளர்ச்சியில், தொழில் நுட்ப வளர்ச்சியின் அடித்தளமாக செயல்பட்டார்.

1962 ஆம் ஆண்டில் ஷாங்காய் எலக்ட்ரிக்கல் எப்பேர்ட்டஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ன் துணை இயக்குனராக பணியாற்றினார். இயந்திர கட்டுமான தொழில் துறையின் அமைச்சகத்தின் கீழ் இயந்திர கட்டுமான ஆராய்ச்சி பணிகளுக்கு பொறுப்பேற்று புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி காட்டினார்.

1966 ஆம் ஆண்டு அவர் வுவன் இட் பவர் மெஷினரி இன்ஸ்டியூட்டின் இயக்குனராகவும், அந்த பகுதி கட்சியின் செயலாளராகவும் பணி புரிந்தார். அணு மின் உற்பத்தி சாதனங்களை வடிவமைப்பதற்கான ஏற்பாடுகளை திறம்பட செய்து முடித்தார் ஜியாங் ஜெமின்.

1966 ஆம் ஆண்டு கலாச்சார புரட்சி சீனாவில் தொடங்கப்பட்ட பொழுது அவரும் பாதிப்புக்கு உள்ளானார். பல தொழில்நுட்ப அதிகாரிகளை போல் ஜியாங் ஜெமின் 1966 ஆம் ஆண்டு கிராமங்களுக்கு அனுப்பப்பட்டு விவசாய தொழிலாளியாக பல ஆண்டுகள் பணியாற்றினார். அதன் பிறகு அவரது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டது

1970 ஆம் ஆண்டு இயந்திர கட்டுமான தொழில்துறையின் அமைச்சகத்தின் கீழ் பணியாற்றினார். 1971 இல் இந்த அமைச்சகத்தால் ருமானியாவுக்கு அனுப்பப்பட்ட நிபுணர் குழுவின் தலைவராக பொறுப்பேற்று பெரும் பங்கு வகித்தார்.

1973 இல் சீனாவுக்கு திரும்பிய பிறகு பல அமைப்புகளில் துணை இயக்குனராகவும், இயக்குனராகவும் இருந்து தொழில் முன்னேற்றத்தில் பெரும்பங்காற்றினார்.

1980 ஆம் ஆண்டில் அவர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விவகாரங்களுக்கான மாநில நிர்வாக ஆணையம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டுக்கான மாநில நிர்வாக ஆணையத்தின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்று வணிக மேம்பாட்டில் முக்கிய பங்காற்றினார். சீனத் தலைமையின் வெளிநாட்டு முகமாக செயல்பட்டார்.

இதே காலங்களில் குவாங் டேங்க், புஜியன் மாகாணங்களில் சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கி அவற்றை வெற்றிகரமாக இயக்கியதும், புதிய பல முன்னோடி திட்டங்களை பொறுப்பேற்று அமுலாக்குவதற்கு காரணமாக இருந்தார்.

1982 ஆம் ஆண்டில் மின்னணு தொழில்துறை அமைச்சகத்தின் துணை அமைச்சராகவும் 1983ல் அமைச்சராகவும் பணியாற்றினார். சீனாவின் மின் அணுவியல் துறையில் ஜியாங் ஜெமின் குறிப்பிடத்தக்க பங்காற்றினார் என்பதை அழுத்தமாக சொல்ல வேண்டும்.

1982 இல் 12வது சீன கட்சி காங்கிரஸில் மத்திய குழு உறுப்பினராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

1985 இல் ஷாங்காய் மேயராகவும், நகராட்சி குழுவின் துணைச் செயலாளராகவும் பணியாற்றினார். 1987 ஆம் ஆண்டில் 13 வது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரஸில் மத்திய தலைமைக்கு தெரிந்தெடுக்கப்பட்டார். ஷாங்காய் மாநிலத்தின் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். ஷாங்காய் நகரின் மேயராக மற்றும் கட்சியில் செயலாளராக பணியாற்றிய போது பல நடவடிக்கைகளில இறங்கி, தொழிலாளர்களையும் பொது மக்களையும் வெகு ஜனங்களையும் அணி திரட்டி மன உறுதி ஏற்படுத்தி முன்னேற்றத்தை உருவாக்கினார். நகர்மயமாக்கல் முறைகளை ஒழுங்குபடுத்தி, நகரங்களை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கு சிறந்த பங்கினை ஜியாங் ஜெமின் செலுத்தினார்.

ஷாங்காய் பெருநகரத்தின் சீர்திருத்தம், திறந்தவெளி கொள்கை, சோசலிசத்தின் நவீனமய கட்டமைப்பு ஆகியவற்றை குறிப்பிடத்தக்க முறையில் நிறைவேற்றிகாட்டினார். கட்சியை கட்டமைப்பதிலும், கலாச்சார நெறிமுறைகளை முன்னேற்றம் ஏற்படுத்துவதிலும், சமூக மேம்பாடுகளை உருவாக்குவதிலும், முக்கியமான தீவிர பங்காற்றினார் தோழர் ஜியாங் ஜெமின்.

1989 ஆம் ஆண்டு வசந்த காலத்தின் பிற்பகுதியிலும், கோடையின் தொடக்கத்திலும் சீனாவில் கடுமையான அரசியல் குழப்பம் ஏற்பட்டது. கொந்தளிப்புக்கு எதிரான தெளிவான அரசியல் நிலைப்பாட்டினை எடுத்து சீனாவின் சோசலிச அரசு அதிகாரத்தை பாதுகாப்பது என்ற நிலையை ஷாங்காயில் திறம்பட அமுல்படுத்தினார். மக்களையும் பணியாளர்களையும்

இணைத்து ஸ்திரத்தன்மையை நிலைநாட்டினார்.

1989 ஆம் ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருக்கக்கூடிய மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1990 ஆம் ஆண்டு மக்கள் சீன குடியரசின் மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980 களின் பிற்பகுதியிலும் 1990 இல் முற்பகுதிகளிலும் சர்வதேச அரங்கிலும் சீனாவிலும் அரசியல் குழப்பங்கள் பெருமளவில் வெடித்தது. உலக சோசலிசம் கடுமையான நெருக்கடிகளை மோசமான முறையில் சந்தித்தது. சீனாவின் சோசலிச நோக்கத்தின் வளர்ச்சி முன்னெப்பொழுதும் இல்லாத சிரமங்களையும், அழுத்தங்களையும் எதிர்கொண்டது. இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஜியாங் ஜெமின் அவர்களின் உறுதித் தன்மை பெரும் பங்காற்றியது.

ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளை பின்னுக்கு தள்ளி சீனாவை பொருளாதாரத்தில் அமெரிக்காவிற்கு அடுத்து இரண்டாம் இடத்தில் கொண்டு வரும் பணியை வெற்றிகரமாக முடித்தார்.

2008 ஆம் ஆண்டு சீனாவில் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்து அந்த போட்டி இதுவரை உலகில் நடைபெறாத அளவிற்கு பிரமாண்டமான முறையில் நடத்திக் காட்டுவதற்கான உந்து சக்தியாகவும் ஜியாங் ஜெமின் இருந்தார்.

கட்சியின் தலைவிதியையும் அரசின் எதிர்காலம் பற்றிய தலைவிதியையும் தீர்மானிக்கக்கூடிய இந்த முக்கியமான வரலாற்று தருணத்தில் ஜியாங் ஜெமின் கட்சியின் மத்திய கூட்டுதலைமைக்கு பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டு செயலாற்றி நெருக்கடிகளை எதிர் கொண்டார்.

அவர் கட்சி, இராணுவம் மற்றும் சீன மக்களை முழுமையாக நம்பி களத்தில் இறங்கினார். சீன குணாதிசயங்களுடன் சோசலிசத்தின் தன்மையை பாதுகாத்து, சீர்திருத்தம் மற்றும் திறந்தவெளி கொள்கை,சோசலிச நவீன மயமாக்கல் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காக அடித்தளத்தை நெருக்கடியான நேரத்திலும் செயல்படுத்தி வெற்றிகண்டார்.

வேலைவாய்ப்பு மறு கட்டமைப்பு செய்தது, வருமான பகுதி சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது, சோசலிசத்தின் முதற்கட்டத்திற்கான அடிப்படை பொருளாதார அமைப்பை நிறுவியது, பொது சொத்துக்களை அதிகப்படுத்த திட்டமிட்டது போன்ற பெரும் பணிகளுக்கு காரணமாக திகழ்ந்தார்.

சட்ட அடிப்படையிலான நிர்வாகத்தின் முறைகளை நடைமுறைப்படுத்தினார். டெங் சியோ பிங்க் அவர்களால் உருவாக்கப்பட்ட 'ஒரு நாடு இரண்டு அமைப்புகள்' என்ற கொள்கையை ஜியாங் ஜெமின் அமுல்படுத்தும் பணியை நடத்திக் காட்டினார். ஹொங்காங், மக்காவு (Hongkong, Macau) பகுதிகளை சுமூகமான முறையில் சீனாவுடன் இணைத்து மீள் வாழ்வை உருவாக்கினார். சுதந்திரமான அமைதி கொள்கையை உருவாக்கி சீனாவின் ராஜதந்திரத்தில் புதிய தளத்தை அமைத்தார்.

இராணுவத்தை நவீன மயமாக்குவதும், அமைதி காலத்திலும், போர்க்காலத்திலும் இராணுவ செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்று உத்திகளை வலியுறுத்தி செயல்பட்டார். இராணுவத்தை குடிமக்கள் ஆதரவுடன் தேசிய பாதுகாப்பில் அணி திரட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்குமான உறவு, இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உயிரோட்டமான, மிகவும் ஆழமான முறையில் ஒத்துழைப்புத் தன்மையுடன் இருக்க வேண்டும் என்று முன்னிலைப்படுத்தி செயல்பட்டார்.

மார்க்சிய சிந்தனை கொள்கையை கடைசி வரை உறுதியாக பின்பற்றி வந்தார். கட்சியின் அடிப்படை கோட்பாடுகளை அவர் நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக இருந்தார். முழு கட்சியின் ஞானத்தையும் ஒருங்கிணைத்தார்.

16வது கட்சி காங்கிரஸில் அவர் ஓய்வு பெறுவதாக அறிவித்த பொழுது கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து மட்டும் விலகினார். சிக்கலான நிலையில் சர்வதேச நிலமை இருந்த பொழுது, தேசிய வளர்ச்சி மற்றும் இராணுவ வளர்ச்சியை எதிர்கொள்ளும் கடுமையான பணிகளை கணக்கெடுத்துக்கொண்டு அவரை மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவராக நீடிக்க வேண்டும் என்று மாநாடு கேட்டுக் கொண்ட அடிப்படையில் நீடித்தார்.

2004 ஆம் ஆண்டு இராணுவ தலைமை ஆணையராக இருந்தும் விலகினார்.

பொறுப்பிலிருந்து விலகிய பிறகும் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகளை அமுலாக்குவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். உடல்நிலை ஒத்துழைக்கிற வரை அவரது களப்பணிகள் நீடித்தது. கம்யூனிஸ்டுகளின் தலைமை பணி மேஸ்திரித்தனமான பணிகள் அல்ல கடும் எதிர்ப்புகளை களத்தில் எதிர்கொண்டு மக்களை அழைத்துச் செல்வதற்கான பணி என்பதற்கு தோழர் ஜியாங் ஜெமின் உலகின் சிறந்த உதாரணமாக நம்முன் காட்சியளிக்கிறார்.

## 10 மாதங்களில் 193 பில்லியன் ரூபா பெறுமதியான, தங்கத்தை அடகு வைத்துள்ள மக்கள்!

இந்த ஆண்டின் முதல் 10 மாத காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி காரணமாக 193 பில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான தங்கத்தை இலங்கை மக்கள் அடகு வைத்துள்ளதாக தெரிய வருகின்றது.

கணக்கெடுப்பில் இந்தத் தகவல் தெரியவந்ததாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல (Wasantha Athukorala) தெரிவித்துள்ளார்.

தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கத்தினர் என்றும், இந்த பணம் குழந்தைகளின் கல்வி மற்றும் விவசாய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், தற்போது தனியார் அடமான மையங்களை நாடும் போக்கு காணப்படுவதாகத் தெரிவித்த பேராசிரியர், இம்மையங்கள் மக்களுக்கு அதிகளவு பணம் வழங்குவதே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

# சீனாவின் உதவியால் நிக்கல் துறையில் இந்தோனேசியா பெரும் முன்னேற்றம்




இந்தோனேசியாவில் நிக்கல் (Nickel) துறையில் சீன உதவியுடன் உருவாக்கப்பட்ட தொழிற்பூங்காவால் (Industrial Park) பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

2013 ஆம் ஆண்டில் சீனாவின் சிங்சான் (Tsingshan) இரும்பு நிறுவனமும், இந்தோனேசியாவின் பின்டாங் டெலாபன் (Bintang Delapan) நிறுவனமும் இணைந்து ஒரு தொழிற்பூங்காவை உருவாக்கினார்கள். சுமார் 3 ஆயிரத்து 200 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட்ட இந்தத் தொழிற்பூங்கா முழுவதும் நிக்கலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களாகவே இருந்தன. அதற்குத் துணையாக இருக்கக்கூடிய நிறுவனங்களும் அங்கு அமைக்கப்பட்டன. இந்தோனேசியாவின் மத்தியப் பகுதியில் உள்ள சுலாவெசி (Sulawesi) மாகாணத்தில் மோரோவளி (Morowali) என்ற இடத்தில் இந்தத் தொழிற்பூங்கா உள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் மேலும் பல சீன நிறுவனங்கள் இந்தத் தொழிற்பூங்காவில் இருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. இந்தோனேசியா மோரோவளி தொழிற்பூங்கா (Indonesia Morowali Industrial Park - IMIP) என்று பெயரிடப்பட்ட இந்தப் பூங்கா பொருளாதார மற்றும் தொழில்நுட்பப் பலன்களை அளித்து வருகிறது. இந்தத் தொழிற்பூங்காவின் வெற்றியால் வடக்குப் பகுதியில் உள்ள மாலுகு (North Maluku) மாகாணத்தின் ஹல்மகேரா தீவில் (Halmahera Island) மற்றொரு தொழிற்பூங்கா அமைந்தது. இங்கும் சீனாவின் சிங்சான் நிறுவனமே முதலீடு செய்தது.

வடக்கு மாலுகு (North Maluku) மற்றும் மத்திய சுலாவெசி (Sulawesi) ஆகிய இரண்டு பகுதிகளுமே இந்தோனேசியாவில் நிக்கல் வளம் அதிகமாக இருப்பவையாகும். இந்தத் துறையில் முன்னேற்றம் காணாமல் இருந்ததற்கு கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்பம் மற்றும் திறமையான ஊழியர்கள் ஆகியவை இல்லாததே காரணமாகும். சீன முதலீடு வந்ததால் அந்தத் தடை உடைந்தது. தற்போது துருப்பிடிக்காத இரும்புத் தயாரிப்பில் உலகிலேயே முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தோனேசியா உருவெடுத்துள்ளது.

துருப்பிடிக்காத இரும்புத் தயாரிப்பில் மட்டுமல்ல, லித்தியம் பேட்டரிகளை உருவாக்குவதிலும் நிக்கல் முக்கியமான பங்கை வகிக்கிறது. அண்மையில் மின்சாரத்தில் ஓடும் வண்டிகள் தயாரிப்பு அதிகமாகியுள்ளதால் அதிகக் கிராக்கியுள்ள உலோகமாக நிக்கல் மாறியுள்ளது. நிக்கலுக்காக சர்வதேசச் சந்தையில் முதலீட்டாளர்கள் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற்பூங்காக்களுக்கு அண்மையில் வந்த இந்தோனேசியாவின் அமைச்சர் பின்சர் பன்ட்ஜைதான் (Binsar Pandjaitan), புதிய எரிபொருள் பொறியியல் தொழில்நுட்பத்தை இந்தோனேசியாவுக்குக் கொண்டு வந்ததற்காக சீன நிறுவனங்களுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

### அனைவருக்கும் வெற்றி

மூலப் பொருட்கள் கிடைக்கும் இடத்திலேயே இத்தகைய முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பங்களோடு தொழிற்பூங்கா அமைப்பது இதில் தொடர்புள்ள அனைவருக்குமே வெற்றியைத் தரக்கூடியதாகும் என்று இந்தோனேசியத் தொழில்நுட்ப வல்லுநர்களில் ஒருவரான பாம்பங் சூர்யோனோ தெரிவித்துள்ளார். இந்தத் தொழிற்பூங்காவை அமைக்கும்போதே சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பழமையான பவளப் பாறைகள் மற்றும் மீன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். கழிவுகளை வெளியேற்றுவதற்காக மிக உயர்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இந்த இரண்டு தொழிற்பூங்காக்களிலும் குப்பைகள் அகற்றவும், பவளப்பாறைகளை உருவாக்கவும் மற்றும் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்கவும் ஏராளமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

இலட்சக்கணக்கான கிலோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய ஒளி மற்றும் காற்று மின்சார ஆலைகளை அமைக்கவிருக்கிறார்கள். பெரும் அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதோடு, உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக சீன முதலீடுகள் அமைந்துள்ளன.

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

இந்த நாடுகள் பலவிதமான பொருட்களை இறக்குமதி செய்கின்றன.

சீன ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது வளைகுடா நாடுகளுடனான வர்த்தகத்தின் போது சீனா தனது கொடுப்பனவுகளை சீன நாணயமான யுவானில் செலுத்துவது குறித்து அவர் பிரஸ்தாபித்துள்ளார். வளைகுடா நாடுகளும் இதற்கு பச்சைக்கொடி காட்டியுள்ளதாகத் தெரிய வருகிறது. அப்படியான ஒரு நிலை ஏற்படுமானால் அது நீண்டகால அடிப்படையில் இப்பொழுது உலகில் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்க டொலரை ஆட்டம் காண வைக்கக்கூடும். ஏற்கெனவே சீனாவுக்கும் ரஸ்யாவுக்கும் இடையிலான வர்த்தகம் யுவான் – ரூபிள் என்ற அடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுக்கும் சவூதி அரேபியா உட்பட வளைகுடா நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முன்னெப்போதையும் விட சீர்குலைந்துள்ள நிலைமையில் சீன ஜனாதிபதியின் வளைகுடா நாடுகளுக்கான விஜயம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உலக அரங்கில் பார்க்கப்படுகிறது.

# போதைவஸ்து பாவனைக்கெதிராக ‘அரகலய’ தேவை!

**பெ**ற்றோர்களால் கைவிடப்பட்ட சுமார் 11,000 சிறுவர்கள் அநாதை இல்லங்களில் இருப்பதாகவும், அவர்களது பெற்றோர் போதை வஸ்துவிற்கு அடிமையானதால் அவர்கள் இல்லாத நிலைமையில் அச்சிறுவர்கள் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும், லேடி றிட்ஜ்வே வைத்தியசாலையின் (Lady Ridgeway Hospital) வைத்திய ஆலோசகர் டாக்டர் டீபல் பெரேரா (Dr Deepal Perera) கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றிடம் தெரிவித்திருக்கிறார். இவர்களது பெற்றோர்கள் போதை வஸ்துவிற்கு அடிமையாகி இருப்பதால் இச்சிறுவர்கள் தமது பாட்டன் – பாட்டிகளுடன்தான் வைத்தியசாலைகளுக்கு வருகிறார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த டாக்டர் கூறுகையில், பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் உருவாகியுள்ள போதைவஸ்துப் பாவனை இப்பொழுது உள்ள எல்லாவிதமான பயங்கரவாதத்தையும் விட மோசமானது, எனவே மக்கள் இதற்கெதிராக எல்லாவிதமான ‘அரகலிய’ (போராட்டங்கள்) இயக்கத்தையும் நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், “போதைவஸ்து வர்த்தகர்கள் இளம் பராயத்து (Adolescent age groups) பிள்ளைகளையே இலக்கு வைத்துள்ளனர்” என்றார்.



**Dr Deepal Perera**

“முழுநாடும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கு எதிராக எழுந்து நின்றது. அதேபோல, கட்சி மற்றும் இன பேதங்களுக்கு அப்பால் இந்தப் போதைவஸ்து அபாயத்துக்கு எதிராகவும் நாம் எல்லோரும் எழ வேண்டும்” எனவும் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த காலத்தில் – கிராமப் பகுதிகள் உட்பட – மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை பற்றி நாம் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை. ஆனால் இப்பொழுது அது மாணவர்கள் மத்தியில் வேகமாக அதிகரித்து வருகிறது. மாணவிகள் உட்பட பாடசாலை மாணவர்கள் மத்தியில் ICE (Crystal Methamphhetamine) பாவனை அதிகரித்து வருகிறது.” என்றார்.

“இப்பொழுதெல்லாம் பெரிய விளையாட்டுப் போட்டிகளின் போது பாடசலை மாணவிகள் ‘பியர்’ (Beer) அருந்துவது அதிகரித்துள்ளது. அது படிப்படியாக போதைவஸ்து பாவனையில் கொண்டு சென்று விட்டுள்ளது. அது இப்பொழுது ஐஸ் (ICE) போதைப்பொருள் பாவனை வரை சென்றுள்ளது. பிள்ளைகள் ஒருமுறை ஒரு போதைப்பொருளைப் பயன்படுத்தினால் பின்னர் வாழ்நாள் முழுவதும் அதற்கு அடிமையாகி விடுவார்கள்.” எனவும் டாக்டர் பெரேரா தெரிவித்தார்.

கிராமம் முதல் நகரம் வரை போதைப் பொருளுக்கு எதிரான போராட்டம் நடத்தப்பட வேண்டும். அதை விற்பவர்களுக்கு ஆகக்கூடியபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். இல்லாமல் நிலைமை இப்படியே போனால் எமது அடுத்த சந்ததி நாட்டை வழிநடத்தத் தகுதியற்றதாகிவிடும். பாடசாலைகளும் அதன் சுற்றுப்புறங்களும் கடுமையாகக் கண்காணிப்பட வேண்டும். ஆனால் தூரதிஸ்ட்டவசமாக சில ஆசிரியர்களும் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகி இருக்கின்றனர் என்பதுதான் கவலைக்குரியது எனவும் டாக்டர் பெரேரா கவலையுடன் தெரிவித்தார்.

# அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

**அ**ரசாங்கம் சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பனவற்றை தனியார்மயப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக அவற்றில் கடமை புரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இந்த வகையான ஆர்ப்பாட்டங்கள் பிரதேச நகரங்களான மாத்தறை, களுத்துறை, பதுளை, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

அவர்கள், “மக்கள் வரிப்பணத்தில் உருவாக்கிய நிறுவனங்களைக் காப்பாற்றுங்கள்”, “தனியார்மயம் நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்லும்”, “அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதை நிறுத்து!” போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தை சிறீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் உள்ள 20 தொழிற்சங்கங்களும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் உள்ள 15 தொழிற்சங்கங்களும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.

கொவிட் – 19 தாக்கத்தினாலும், ரஸ்ய – உக்ரைன் போரின் விளைவாகவும் பல்வேறு நாடுகளில் உருவாகியுள்ள நெருக்கடிகளைப் போலவே இலங்கையிலும் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இந்த நிலைமையால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் சதாரண பொதுமக்களாக உள்ளனர். இதனால் இலங்கையின் உழைக்கும் மக்கள் மத்தியில் இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு விலைவாசி உயர்வு, சம்பளக் குறைப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், ஜனநாயக மறுப்பு போன்ற நிலைமைகள் உருவாகியுள்ளன. இதனால் மக்கள் அரசின் மீது கோபம் அடைந்துள்ளனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் கட்டுப்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற உலகக் கொள்ளைக்கார வட்டி நிறுவனங்களிடம் நிதியுதவி பெறும்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி…**

அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியையும் வகிக்கிறார். சரியோ, பிழையோ இலங்கையிலுள்ள மிகுந்த அனுபவமுள்ள அரசியல்வாதிகளில் அவரும் ஒருவர். ஆனால் அவரது ஐ.தே.கட்சியினதும் அவரதும் கடந்தகால இனவாத வரலாறு, அவரை ஒரு புதிய மனிதராக, இனவாதமற்ற உண்மையான தேசியத் தலைவராக, செயல்பட அனுமதிக்குமா என்ற கேள்வி நியாயமாகச் சிந்திக்கும் அனைவருக்கும் இருக்கிறது.

ஏனெனில், ரணிலின் மாமனார் ஜே.ஆர். தான் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் பிரித்தானியர் ஆட்சி செய்த காலத்திலேயே அன்றிருந்த இலங்கை சட்டசபையில் 'தனிச்சிங்கள' மசோதா ஒன்றை முதன்முதலாகக் கொண்டு வந்து அந்தக் கருத்தின் பிதாமகனாக விளங்கியவர். பின்னர் 1956 தேர்தலில் வெற்றிபெற்று எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமராகி, தனது தேர்தல் வாக்குறுதிப் பிரகாரம் 'தனிச் சிங்கள'ச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது ஐ.தே.கவும் அதை ஆதரித்து வாக்களித்தது. மொழிப் பிரச்சினையில் மட்டும் ஐ.தே.க. சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டைப் பின்பற்றியது என்றில்லை.

1948 பெப்ருவரி 4 இல் இலங்கை சுதந்திரம் பெற்று முதலாவது சுதந்திர அரசாங்கம் அன்றைய ஐ.தே.க. தலைவர் டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் பதவி ஏற்றது. அப்படிப் பதவி ஏற்ற அவரது அரசாங்கம்தான் 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்பது போல, இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களின் பிராஜாவுரிமையைத் திட்டமிட்டுப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது. அது மட்டுமின்றி, வடக்கு கிழக்கில் இருந்த தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்ததும் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கமே. டி.எஸ்.சின் சிங்களப் பேரினவாதக் கொள்கைகளையே பின்னர் பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கங்களும் பின்பற்றின. (ஜே.ஆர். 1977 இல் முதன் முதலாக நாட்டின் தலைவரான போது, 'டி.எஸ்.சேனநாயக்கவின் கொள்கையே எனது கொள்கை' எனப் பகிரங்கமாக அறிவித்தவர்) இனப் பிரச்சினையைத் தீர்க்க காலத்துக்குக் காலம் எடுத்த நடவடிக்கைகளையும் குழப்பிய பெருமையும் ஐ.தே.கவையே சாரும்.

அந்த வகையில் பார்த்தால், 1957 இல் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்த பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையையும், 2000 ஆம் ஆண்டில் சந்திரிக அரசாங்கம் கொண்டு வந்த நல்லதொரு (சமஸ்டிக்கு ஒப்பான) தீர்வுத் திட்டத்தையும் நிறைவேற்ற விடாமல் இனவாதத்தைத் தூண்டிக் குழப்பியது ஐ.தே.கட்சியே. அது மட்டுமல்லாமல் ஐ.தே.க. கட்சி இனப் பிரச்சினைத் தீர்வுக்கென தானே 1965 இல் முன்வைத்த மாவட்ட சபை முறையையும், 1977 இல் முன்வைத்த மாவட்ட அபிவிருத்தி சபை முறையையும் நிறைவேற்றாமல் ஏமாற்றி நடந்து கொண்ட வரலாறும் ஐ.தே.கவுக்கு உண்டு. அதுவுமல்லாமல், 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ராஜீவ் காந்தி – ஜெயவர்த்தன உடன்படிக்கை மூலம் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இடை நிறுத்தி, காலில் போட்டு மிதித்த பெருமையும் ஐ.தே.க. ஜனாதிபதி பிரேமதாசவையே (சஜித் பிரேமதாசவின் அப்பா) சாரும்.

அது மட்டுமின்றி, 2015 இல் 'நல்லாட்சி' என்ற பெயரில் அமைந்த அரசாங்கத்தின் பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக வாக்குக் கொடுத்து ஏமாற்றியது மட்டுமல்ல, தமிழ் மக்கள் எதிர்நோக்கிய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூட எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

ஐ.தே.க. இனப் பிரச்சினைக்கான தீர்வுகளைக் குழப்பிய வரலாற்றை மட்டும் கொண்டிருக்கவில்லை. அந்தக் கட்சிக்கு இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக இன வன்செயல்களை நடத்திய ஒரு வரலாறும் உண்டு என்பது மறக்கப்பட முடியாதது.

தமிழ் மக்களுக்கெதிராக 1958 இல் நடத்தப்பட்ட முதல் இன வன்செயல், ஐ.தே.க. ஆட்சியின் போது 1977 இல் நடத்தப்பட்ட இன வன்செயல், 1981 இல் நடத்தப்பட்ட (பெரும்பாலும் மலையகப் பகுதிகளில்) இன வன்செயல், இலங்கையின் வரலாற்றிலேயே 1983 இல் நடத்தப்பட்ட மிக மிக மோசமான இன வன்செயல் என்பனவற்றுக்கு ஐ.தே.க. நேரடியாகப் பங்காற்றியுள்ளது அல்லது பின்னணியில் இருந்துள்ளது. (1983 இல் தமிழ் மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட இன சங்காரத்தின் போது, அன்றைய ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்களுக்காக ஒவ்வொரு பகுதிகளையும் ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுத்த போது, கொழும்பு மாவட்டத்து இன வன்செயல்களை நடத்தும் பொறுப்பை ரணிலிடம் கொடுத்ததாக சில தகவல்கள் வெளிவந்துள்ளன)

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான், நாட்டில் ஏகாதிபத்திய சக்திகளாலும், அவை பின்னின்று நடத்திய 'அரகலய' போராட்டத்தாலும், சட்டபூர்வமாக மக்களைால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தைக் கவிழ்த்து, பின் கதவால் ஜனாதிபதியாகிய ரணில் விக்கிரமசிங்க, தற்பொழுது இனப் பிரச்சினைத் தீர்வைக் கையில் எடுத்துள்ளார். இந்த முயற்சிக்கும் நிச்சயமாகச் சில உள்நாட்டு – வெளிநாட்டுக் பின்னணிக் காரணிகள் உண்டு. அதைப் பற்றி ஆராய்வதை இப்போதைக்கு ஒரு பக்கம் வைத்து விடுவோம்.

இந்தச் சூழ்நிலையில், நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில், ஒரு நூற்றாண்டுகால இனப் பிரச்சினையை ரணில் ஒன்றரை மாதங்களில் தீர்த்து வைக்க – அதாவது 2023 பெப்ருவரி 4 இல் நடைபெறவுள்ள இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் – எடுத்திருக்கும் முயற்சி வெற்றி பெறுமா அல்லது வழமைபோலத் தோல்வியடையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்ற போதிலும், அவரது முயற்சிக்கு இன்றைய சூழலில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமானதாகும்.

இன்றைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிக்கு முன்னொருபோதும் இல்லாத சில அனுகூலமான நிலைமைகளும் காணப்படுகின்றன. அவையாவன:

ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருந்தாலும், அவரது பதவி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவிலேயே தங்கியிருக்கிறது. அதன் தலைவர்களான முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்சவும், முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும்,

ரணில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எடுத்து வருகின்ற முயற்சிகளை பகிரங்கமாக வரவேற்றுள்ளனர். இது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

அடுத்ததாக, வழமையாக இலங்கையில் ஆட்சியில் இருக்கின்ற கட்சி இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஏதாவதொரு முயற்சியில் ஈடுபட்டால், அதை எதிர்க்கட்சி அரசியல் ஆதாயம் கருதிக் குழப்புகின்ற ஒரு நிலைமை இருந்து வந்தது. ஆனால் சஜித் பிரேமதாச தலைமையிலான இன்றைய எதிர்க்கட்சி அவ்வாறானதொரு நிலைப்பாட்டில் இருப்பதாகத் தோன்றவில்லை.

அதற்கடுத்தாக, தமிழ் தலைமைகளைப் பொறுத்தவரையில் தமிழ் இனவாதத்தையே அவர்களது அரசியல் மூலதனமாகக் கொண்டு செயல்பட்டு வருவதால், கடந்த காலங்களில் இனப் பிரச்சினை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளை சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிய போது, தமிழ்த் தலைமைகளும் அதற்குத் தமது பங்களிப்பை வழங்கி வந்தன. இனப் பிரச்சினை தீராமல் போன பிரதான காரணிகளில் அதுவும் ஒன்று. ஆனால்,இன்றைய தலைமை (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரதானமாக தமிழரசுக் கட்சி) இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதைக் காண முடிகிறது.

அது தவிர, நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் 30 வருடப் போரினால் களைப்பும் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்து விட்டதாலும், தமது பட்டறிவின் மூலம் நியாயத்தை ஓரளவு உணர்ந்துள்ளதாலும், அரசாங்கம் எடுக்கும் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சியை எதிர்க்கும் நிலைமை இன்று இல்லை. (இனவாத ஜே.வி.பி. மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து பலம் குன்றி இருப்பதால் அதனால் பெரிய அளவில் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்ட முடியாது)

எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கையில் இனப் பிரச்சினை உருவானதிற்கும், வளர்ந்ததிற்கும், அது யுத்தமாக மாறியதற்கும், ஏகாதிபத்திய சார்பு மேற்கு நாடுகளுக்கும், பிராந்திய வல்லரசான (விஸ்தரிப்புவாத) இந்தியாவுக்கும் முக்கியமான பங்கு உண்டு. தற்பொழுது அந்த சக்திகளுக்குப் பிடித்தமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவி வகிப்பதாலும், அவரது அரசாங்கம் ஏகாதிபத்திய சார்பு, இந்திய சார்பு கொள்கைகளைப் பின்பற்றுவதாலும், தற்போதைய அரசின் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சியைக் அவர்கள் குழப்பும் ஏது நிலை எதுவும் இல்லை எனலாம்.

எனவே, ரணில் இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக (பெரும்பாலும் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகளை முழுமையாக செயற்பட வைக்கும்) எடுக்கும் முயற்சிகளுக்கு வாய்ப்பான ஒரு சூழ்நிலையே காணப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தையும் தவற விட்டால், நாட்டிற்கு எதிர்காலம் என்ற ஒன்று இருக்கப் போவதில்லை.

# அமெரிக்காவால் தொடரும் யுத்தம்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் விசேட இராணுவ நடவடிக்கை குறித்து உக்ரைன் உள்பட அனைத்து தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின் பகிரங்கமாக அறிவித்துள்ளார். உக்ரைனில் வாழும் ரஷ்ய மொழி பேசுபவர்களுக்கு ஆதரவாக பெப்ரவரி 24ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரஷ்யாவின் விசேட இராணுவ நடவடிக்கை, 300 நாட்களை கடந்து விட்டது. இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் இணைந்து இதுவரையில் 100 பில்லியன் டொலருக்கு மேற்பட்ட பெறுமதியான ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கியதுடன், ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஆயுத உதவியாலேயே இந்தப் போர் பல மாதங்களாக நீடித்து வருகிறது. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ரஷ்யா–உக்ரைன் அமைதி பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்று சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி வோலோதிமிர் ஸெலன்ஸ்கி முதன்முறையாக டிசம்பர், 21ந் திகதி அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். அதிநவீன 'பேட்ரியாட்' வான் பாதுகாப்பு ஏவுகணை (Patriot surface-to-air missile system), போர் விமானங்களில் பொருத்தப்படும் அதிநவீன குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் உள்பட மேலும் 1.80 பில்லியன் டொலர்கள் இராணுவ உதவி வழங்குவதாக அமெரிக்கா அவருக்கு உறுதியளித்துள்ளது. "உக்ரைனுக்கு நீங்கள் கொடுக்கும் நிதியுதவியை வெறும் தானம் என்று நினைக்காதீர்கள். இது ஜனநாயகம், பாதுகாப்புக்கான முதலீடு" என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2023 ஆம் ஆண்டில் மேலும் 50 பில்லியன் டொலர்களை அமெரிக்கா உக்ரைனுக்காக ஒதுக்கியுள்ளது. இத்தகைய ஆயுத உதவிகளாலேயே போர் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இந்நிலையில், பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் விளாதிமிர் புட்டின் டிசம்பர் 18ந் திகதி அறிவித்துள்ளார். இது குறித்து அவர் 'ரோசியா–1' (Rossiya -1) அரசு தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில், "உக்ரைன் போர் தொடர்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளைப் பற்றி சம்பந்தப்பட்ட அனைவருடனும் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். உக்ரைனும் அதன் ஆதரவு மேற்கத்திய நாடுகளும் தான் அமைதிப் பேச்சு வார்த்தையை ஏற்க மறுக்கின்றன" என்றார். மேலும் அவர் கூறுகையில், "ரஷ்யாவைத் துண்டாடுவதையே மேற்கத்திய நாடுகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. வரலாற்றுப் பூர்வமான ரஷ்யாவைத் துண்டாடுவதே எமது புவிசார் அரசியல் எதிரிகளின் கொள்கை. எங்களது இலக்கோ ரஷ்ய மக்களை ஒன்றிணைப்பதுதான்" என்றார்.

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளது. அந்த உதவியை அவர்கள் வழங்குவதற்கு சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயரில் பல நிபந்தனைகளை விதித்துள்ளார்கள். அவர்களது நிபந்தனைகளை ஏற்றே ரணில் அரசாங்கம் பல்வேறு மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இன்னும் பல பொதுச் (அரச) சொத்துகளை தனியாருக்குத் தாரைவார்ப்பதற்கு ரணில் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

# கியூபா தனிமரமாக இல்லை




கியூபா மீதான அமெரிக்காவின் மனிதத் தன்மையற்ற பொருளாதாரத் தடைகளுக்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கிரேக்க மொழியில் சுருக்கமாக KKE என்றழைக்கப்படுகின்ற, கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சியின் (The Communist Party of Greece) உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள் எதிர்ப்புக் குரலை எழுப்பியுள்ளனர். பல்வேறு பிரச்சனைகளில் ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளின் கருத்துக்களை கேட்டறிவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாக ஐரோப்பிய நாடாளுமன்றம் இருந்து வருகிறது. 705 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அவை, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளிலிருந்து நேரடியாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள். தற்போது 9 ஆவது நாடாளுமன்றம் தேர்வு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. சர்வதேசப் பிரச்சனைகள் குறித்து அந்த நாடாளுமன்றத்தின் மனுக்கள் குழு தற்போது உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டு வருகிறது. இந்த மனுக்கள் குழு முன்பாகத்தான் பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். கியூபா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை விலக்கக்கோரும் மனுவும் அக்குழுவிற்கு வந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் தடைகளுக்கு எதிரான தீர்மானம் வரும்போது விரல் விட்டு எண்ணும் அளவில் கூட நாடுகள் அமெரிக்காவின் பக்கம் நிற்கவில்லை. ஓரிரண்டு நாடுகளைத் தவிர அத்தனை நாடுகளும் பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்றுதான் குரல் கொடுத்தன

ஆனால், ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் வலதுசாரி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கியூபாவுக்கு எதிராக அங்கு குரல்கள் எழுந்தன. மனுக்கள் குழுவின் விவாதத்திலும் அவர்கள் பொருளாதாரத் தடைகளை நியாயப்படுத்திப் பேசினர். எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், இடதுசாரி உறுப்பினர்கள், குறிப்பாக கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒரு நாட்டின் குரல் வளையை நெரிப்பது மனித குலத்துக்கே எதிரானது என்று அவர்கள் குரல் எழுப்பினர். "தனது போராட்டத்தில் கியூபா தனியாக இல்லை. சொல்லப்போனால் அமெரிக்காதான் சர்வதேச சமூகத்தின் முன்பாகத் தனிமைப்படுத் தப்பட்டுள்ளது" என்று கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அக்கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரான நிக்கோலோ அலவனோஸ் (Nikolaou-Alavanos), "ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கியூப மக்களின் போராட்டத்தை நாங்கள் உறுதியாக ஆதரிக்கிறோம். ஐரோப்பிய யூனியன் மற்றும் வலதுசாரி உறுப்பினர்களின் பொய்கள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் உடனடியாக விலக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

**வலதுசாரிகளுக்கு எரிச்சல்**

கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி உறுப்பினர்களின் ஆதரவுக்குரல் வலதுசாரி உறுப்பினர்களுக்கு எரிச்சலைத் தந்துள்ளது. ஐரோப்பிய மக்கள் கட்சி என்ற பெயரில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இந்த உறுப்பினர்கள், கம்யூனிச எதிர்ப்பாளர்களாகவும் இருக்கிறார்கள். கம்யூனிசப் பிரச்சாரத்தை மேற்கொள்ளும் இடமாக ஐரோப்பிய நாடாளுமன்றத்தைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்ற அவர்களின் குரலுக்கு இடதுசாரிகள் பதிலடி தந்தனர். கம்யூனிச எதிர்ப்புத் தளமாக ஐரோப்பிய நாடாளுமன்றத்தை மாற்ற முயற்சிக்கிறீர்கள் என்ற பதில் வலதுசாரிகளைத் திணறச் செய்தது. கியூபாவில் அடிப்படைச் சேவைகள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவை பற்றாக்குறையாக உள்ளன. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் இதற்குக் காரணமாக உள்ளது. இந்தத் தடைகளால் உலகின் பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்கள் கியூபாவுக்கு தங்கள் பொருட்களை அனுப்ப முடியாத நிலை இருக்கிறது. மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற பொய்ப் பிரச்சாரத்தை இதற்கு மேலும் அனுமதிக்கக்கூடாது என்றும் இடதுசாரி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

அமெரிக்கா 1960 ஆம் ஆண்டிலிருந்து கியூபா மீது வர்த்தகத் தடையை விதித்துள்ளது. உலக வரைபடத்தில் வேறு எந்த நாடும் இத்தகைய தடைகளை சந்தித்தது இல்லை. வர்த்தக தடை விதித்ததால் வேறு எந்த நாடும் கியூபாவுடன் வர்த்தகப் பரிவர்த்தனையில் ஈடுபட இயலவில்லை. உயிர் காக்கும் மருந்துகளைக் கூட கியூபாவால் இறக்குமதி செய்ய இயலவில்லை. அமெரிக்கா நடத்துகின்ற அடாவடித்தனங்களை, உலக நாடுகளும், உலக பாட்டாளி வர்க்கமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. அமெரிக்காவின் அட்டூழியங்களை சகித்துக் கொள்ள கியூபா தனித்து விடப்படவில்லை.